mukadu.editer@gmail.com

# முகடு


mukadu

"தமிழ் எங்கள் உயிருக்கு மேல்"

தை - மாசி 2015



- கிட்டண்ணா வருகிறார்
- தற்கொலை நிரந்தர தீர்வா ?? (ஆய்வு)
- இரகசிய எண்களுடன் வாழ்தல்
- தாவூத்தின் (பாகம் 2)
- GOD IS DED என்னுடைய கதை
- தமிழ்க் கடைத் தம்பி (பகுதி 2)
- கீபோட் போராளி நீ ஈழ வேங்கையால் வா
- நஞ்சுண்ட காடு எனது பார்வை




இருமாத இலக்கிய இதழ்

ஓலை - 3

# மண்ணில் விழுந்த விதைகள்

**கிட்டண்ணா**

**கவிமகன்.இ**



“கிட்டர் நிக்கிறார் இனி பயமில்லை” இப்படித்தான் யாழின் மக்கள் கிட்டுவின் மீதான நம்பிக்கையை விதைத்திருந்தனர். யாழ்ப்பாணத்தின் எந்த பகுதி என்றாலும் முன்னணி காவலரண் கிட்டுவின் கட்டுப்பாட்டில் தான் இருக்கும் முன்னேற முனையும் சிங்களத்து சேனைகளுக்கு சொல்லி அடி கொடுக்கும் உன்னத வீரன் தன்னகத்தே தமிழீழ வாழ்வதனை கருவாக்கி வாழ்ந்து வந்து கொண்டிருந்தார். தமிழீழ விடுதலை போராட்ட வாழ்வில் தேசியத்தலைவர் அவர்களின் நம்பிக்கைக்குரிய அன்புத் தம்பி நேசமும் பாசமும் அவரது தாகம் தணிக்கும் மருந்தான உடன்பிறவாத உறவு. தாயகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தன் பணிக்கான பாதங்களை பதித்து நடை பயின்ற பெரும் சாணாக்கியன். கிட்டண்ணாவின் எண்ண ஓட்டங்களை நாம் மதிப்பதோ அல்லது அவற்றை நாம் கணிப்பது என்பதோ யாராலும் முடியாத காரியம் அவரது நினைவில் எழும் புதிய சிந்தனைகள் ஒவ்வொரு உயிர்ப்புள்ள உயிர்களையும் புதிதாய் பிறந்ததான உணர்வுக்குள் கொண்டு செல்லும். புதிய உத்வேகப்படுத்தும். அவர் ஒரு சிந்தனைவாதி என்பதை விட அவர் சகலகலா வல்லமை பொருந்திய ஒரு தசவதானி ஒரு நேரத்தில் பல விடையங்களை கருத்தில் எடுக்க கூடியவர். அடிப்படை பயிற்சிக்கு வரும் போராளி என்றாலும் முதுநிலை போராளி என்றாலும் பொதுமகன் என்றாலும் எப்படி இருக்க வேண்டும் என்பதை கனகச்சிதமாக புரியவைப்பதில் சிறப்பானவர் இதனால் என்னவோ அவரிடம் கொடுக்கப்படும் அனைத்து பணிகளும் சீரான முடிவடைதலை பெறும். தாயாக விடுதலை போராட்டம் அடுத்த படி நிலையை தொட்டிருந்த காலம் எமக்கான சர்வதேச தளம் ஒன்றை நிறுவ வேண்டிய தேவையை உணர்கிறார் தேசிய தலைவர். பொருத்தமான பணியை கிட்டண்ணாவிடம் ஒப்படைக்கிறார். அதுவரை காலமும் தேசத்துக்கான வாழ்வில் தாயகத்தின் பதித்த பாதங்களை எங்கோ ஒரு அறியப்படாத இடத்தில் அறியப்படாத நண்பர்களுடன் தனது பணியை செய்யும் கடினமான நிலையை எண்ணி கலங்காத அவரின் விழிகள், தன் மக்களை தன் தேசத்தை விட்டு பிரிவதை எண்ணி கலங்கி நிற்கிறது. ஆனாலும் தரப்படும் பணி எதையும் நிறைவேற்றும் தன்மை கொண்ட உயரிய எண்ணம் கொண்டதால், துணையை, தான் நேசித்த உறவுகளை தான் வாழ்ந்த மண்ணை விட்டு பிரிகிறார்.

அண்ண நான் சமையல் பொறுப்ப ஏற்று கொள்ளுறன் நீங்க மற்றதுகளை பாருங்க....” கிட்டு இப்பிடித்தான் எப்போதும் புன்னகை சிந்தியபடி பணிகளை தானாகேவே ஏற்று கொள்ளும் தன்மை பொருந்தியவர். பணிகளில் தாழ்ந்தது உயர்ந்தது என்ற பாகுபாட்டை அவருக்கு பிரித்து பார்க்க தெரியாது எந்த வேலை எனிலும் முன்நின்று முடித்து வைக்கும் திறன் கொண்டவர். தனது போராளிகளின் முன்னுதாரணமாக திகழும் பொறுப்பாளியாக தலைவர் கூறும் விடையங்களை நேரடியாக போராளிகளின் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தும் தன்மை பொருந்தியவர். பணியில் முன்னுதாரணியாக இருந்தாலும் அதை செய்து முடிக்கும் திறன் அல்லது தன்மை என்பது அவருக்கு அவரே நிகர் என்ற நிலையை கோடிட்டு நிற்பார்.” இது விடுதலை புலிகளின் புலனாய்வு பிரிவு பொறுப்பாளர் பொட்டு அவர்களின் கிட்டண்ணன் மீதான நினைவு குறிப்பாக்க மலர்ந்த வசன தொடர்.... அதை போலவே சர்வதேச தளத்தில் தன் பணியை நிலைப்படுத்திய கிட்டு சர்வதேச அளவில் எமது போராட்ட விழுமியங்களை கொண்டு செல்வதில் ஊடக முக்கியத்துவம் பற்றி உணர்ந்தவராக. எரிமலை, களத்தில். உலகத்தமிழர். சுதந்திர தாகம், என்று பல ஊடக சஞ்சிகைகளை பல இடர்களை கடந்து வெளியிட்டு சர்வதேச அளவில் எமது போராட்டத்தின் முக்கியத்துவத்தை உணரவைத்தார். தமிழ்

மொழி மட்டுமல்லாது பிரெஞ்சு, டொச்சு நோர்வேயியன் போன்ற மொழிகளிலும் “தமிழ்”, “வணக்கம்”, “தமிழீழம்” என்று பல மொழிகளில் சிறு புத்தகங்களை வெளியிட்டு சர்வதேச மக்களிடையேயும் எமது தேசிய பிரச்சனையை கொண்டு செல்வதில் முனைப்பு கொண்டார். இதை விட ஊடக முக்கியத்துவத்தில், வானொலி மற்றும் ஒளி நாடாக்களின் ஆக்கிரமிப்பின் தன்மை உணர்ந்தவராக தாயகத்தில் தேசியத்தலைவர் “நிதர்சனம்” தொலைக்காட்சியை, புலிகளின் குரல் வானொலியை ஆரம்பித்தது போல புலத்தில் “ஈழநாதம் வானொலி மற்றும் “தரிசனம்” எனும் ஒளிநாடா வெளியீட்டையும் அறிமுகப்படுத்தி மக்கள் மனங்களில் எங்கள் தாயக சிந்தனைகளை விதைத்தார் கிட்டண்ணா. இவ்வாறான மக்கள் விழிப்புணர்வு செயற்பாடுகளுடன் சர்வதேச அளவிலான பரப்புரை செயற்பாடுகளை விரிவடைய செய்த பணியை செவ்வனே செய்தார் கிட்டு. சர்வதேச அளவில் ஒருங்கிணைக்கப்படாது கிடந்த எம் மக்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கான எமது போராட்ட தேவைகளை தெளிவு படுத்தும் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்களுக்கான பல அமைப்புக்களை உருவாக்கும் செயற்பாட்டில் புலம்பெயர் தமிழீழ அமைப்பான “தமிழர் ஒருங்கிணைப்பு குழு” என்ற அமைப்பை உருவாக்கி அவற்றினூடாக பல உப அமைப்புக்களையும் உருவாக்கி எமது போராட்ட நியாயங்களை மக்களிடையே ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பாக கொண்டு செல்வதில் வெற்றி கண்டார். அதை விட அந்தந்த நாட்டு சட்டங்களுக்கமைவாக அத்தனை அமைப்புக்களையும் பதிவு செய்து அவற்றின் சட்ட சிக்கல்களை தீர்ப்பதில் வெற்றி கண்டார். எம் மக்கள் மீதான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல் மட்டுமன்றி மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள் மீ-தான இலக்கையும் அவர் அடைவதில் வெற்றி கண்டார் மேற்குலக நாடுகளின் அரசதுரையினரை எமது பிரச்சனைகள் மற்றும் தாயக விடுதலை முனைப்புக்கள் சென்றடைவதற்கான வழிமுறைகளை இனங்கண்டு அவர்களை எமது தாயக போராட்டத்தின் நியாயங்களை புரிந்தவர்களாக்கினார். காலங்கள் கனிந்து விடுதலை உணர்வுகள் மேலோங்கி நின்ற நிலையில் சர்வதேச அளவில் முன்னெடுக்கப்பட்ட சமாதன முன்னெடுப்புக்கள் தொடர்பாக தேசியத்தலைவர் அவர்களால் தாயகத்துக்கு நேரடியாக அழைக்கப்படுகிறார் கிட்டு. சுற்றி வர நீர் எங்கு பார்த்தாலும் நீல வானும் கடலும் சூழ்ந்து கொண்டிருக்கிறது. பொங்கிடும் அலைகளை தாண்டி வந்து கொண்டிருந்தது அந்த புனிதனை ஏற்றி கொண்டு ஒரு கடற்கலம். கொண்ட கொள்கையில் குன்றிடாதவன் கிட்டு அதே போலவே அவன் வளர்த்த புலிகளும் அவன் நெறிப்படுத்தி கொண்டு வந்த கலமும் இலக்கு நோக்கி நேரிய வழியில் பயணத்தை தொடந்து கொண்டிருந்தது. வானம் அவர்கள் பயணத்தின் முடிவு தெரிந்ததாக மேக மூட்டத்தோடு காணப்படுகிறது. ஆனாலும் கயவர்கள் மனக்கிடைக்கைகள் புரியாதவர்களாக தொடர்பயணத்தில் சமாதான தீர்வுக்கான முனைப்பு கொண்டு தலைவனின் நேரடி நெறிப்படுத்தலுக்காக தாய் வீடு தேடி வந்து கொண்டிருக்கின்றனர் புலிகள். தாயகம் நோக்கி வந்து கொண்டிருந்த கப்பலினை தன் மடியில் தவழவிட்டு அரவணைத்து கிடந்தது அந்த வங்கக் கடல். தமிழீழ மக்களின் கனவுகள் அபிலாசைகள் என்று அத்தனையையும் தன்னகத்தே சமாதான புறாவாக வானில் பறக்க எண்ணம் கொண்டு பயணித்து வருகிறது சமாதான புறா ஒன்று, கிட்டண்ணா சரித்திரம் தன் மேலே ஒரு வரலாற்று குழந்தையின் கதையை பதிவு செய்யப்போவது தெரியாது பயணித்து கொண்டிருக்கிறான். தமிழன் வீரம் உலகறிந்த உண்மை. ஆழ கடலெங்கும் எங்கள் வீரர்கள் ஈழ விதையான வரலாறு மறக்கப்பட முடியாதது. இந்த வகையில் கிட்டுவும் ஒருவனாக வரலாறாகி போவது தெரியாத தாயகம் சமாதனாத்தின் தூதுவனை கண்டிட துடித்து போய் கிடக்கிறது. திடீர் என்று கார் மேகம் சூழ்ந்தது. ஒருங்கிணைக்கப்பட்ட கடற்படைக்கலங்கள் அவர்களை சூழ்ந்து தமது சூழ்ச்சியை அரங்கேற்ற தொடங்கின. வீரப்பிறப்பின் திருவுருவானவர்கள் சரணடைந்தால் தம் நிலை என்ன என்பதை உணர்ந்தவர்கள் விடுதலை பயணத்தை தளராத துணிவோடு முன்னெடுத்தவர்கள் அன்றும் துஞ்சாமல் தொடந்தார்கள். சர்வதேச தலைமையகத்துக்கு அவர்கள் நிலை உடனடியாக அறிவிக்கப்படுகிறது ஆனாலும் அங்கு பொறுப்பில் இருந்தவர்கலாது கோரிக்கைகளையும் அவர்கள் ஊடகங்கள் மற்றும் இராஜதந்திர ரீதியாக வேண்டுகை விடுத்த எதையும் இந்திய வல்லாதிக்கம் ஏற்று கொள்ளவோ அல்லது அதற்கான அடிப்படை காரியங்களை எந்த உலகநாடுகளும் செய்யாத நிலையில் நடுக்கடலில் சிறைப்பிடிக்கப்பட்டதான நிலையில் இருந்த கிட்டு அண்ணா முடிவெடுக்கிறார். தலைவருக்கு நிலைமை தெளிவு படுத்தப்படுகிறது. முடிவெடுக்கும் அதிகாரியாக அங்கே இருந்த கிட்டண்ணா முடிவெடுக்கிறார். கப்பல் ஓட்டிகளாக பணியில் இருந்தவர்கள் கடலில் இறக்கி விடப்படுகிறார்கள் தங்கள் உயிர்களையும் தமது கலத்தையும் வெடியோடு சங்கமிக்க முடிவெடுக்கிறார் கிட்டண்ணா களத்தில் நஞ்சு கட்டி களமாட புறப்பட்டவர்கள் மேற்கொண்டிருந்த பயணம் இடை கடல் மடியில் சங்கமம் ஆகும் நிலையில் இருப்பது கண்டு எங்கள் தேசமே ஆடி போய் கிடந்தது எங்கள் குழந்தைகளை காப்பாற்றுமா சர்வதேசம் என்ற ஆவல் அனைவரது மனங்களிலும் ஒரே வினாவாக எழுந்து நின்றது. இரு நாட்கள் கடந்த நிலையில், அதிகாலை நேரம் வெடிகள் பல அதிர்ந்து ஓய்ந்தது. வங்கக்கடலில் எழுந்த ஒளிவிம்பங்கள் வெப்பக்காற்றை கொண்டு வந்து

சேர்த்தது. தியாக வேள்வியில் ஆகுதியாக்கி தம்முயிரை புலிப்போராளிகள் சென்றார்கள் என்ற செய்தியை காற்றோடு கலக்க வைத்து கொண்டு வந்து சேர்த்தது. சிறந்த போராளியாக தகுதிமிக்க புகைப்பட கலைஞனாக ஓவியனாக மண் மீது கொண்ட பாசத்தில் சிறந்த எழுத்தாளனாக என்று எத்தனையோ வடிவங்களாகி நின்றவன் கிட்டு. தாயகத்துக்காக உழைத்து நிமிர்ந்த பெருவீரனும் தன் தோழர்களும் வெடியாக உருவெடுத்து நெருப்போடு சங்கமித்து போன வரலாற்றை எம் மண் தன் வரலாற்றில் பதிவாக்கி கொண்டது. கிட்டுவிற்குள் ஒரு அபூர்வம் இருந்தது அதை நான் ஆரம்பம் முதலே இனம் காண கூடியதாக இருந்தது. அது அவனது ஆளுமையாக ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்து சிறப்பியல்புகளும் அவனிடத்தில் இருந்தன அதனால் தான் அவன் ஒரு இலட்சியவாதியாக வாழ்ந்தான் புனித போராளியாக போராடினான்.... தேசிய தலைவர் தனது மனதின் வார்த்தைகளாக கிட்டண்ணா மீது உள்ள மானுடவுனர்வுகளை வெளிப்படுத்திய போது கிட்டு எம்மை விட்டு தூர தேசம் கடந்து விட்டிருந்தான். கிட்டு வீர காவியமாகி விட்டான் என்ற செய்தி தாயகத்தை வந்தடைந்த போது நிறைவு காணாத இலட்சிய நெருப்பு அணைந்து போன

எமது எதிரியையும் அவனது நோக்கத்தையும் இனங் கண்டுகொள்வது சுலபம். ஆனால் துரோகிகள் முகமூடி அணிந்து நடமாடுகிறார்கள்: எதிரியின் கைபொம்மையாக செயற்படுகிறார்கள் தமது சுயநலத்திற்காக சொந்த இனத்தையே காட்டிகொடுக்கத் தயங்காத இந்த ஆபத்தான பிற்போக்கு சக்திகள் மீது எமது மக்கள் மிகவும் விளிப்பாக இருக்கவேண்டும்.

தமிழ் ஈழத் தேசிய தலைவர்

**வே.பிரபாகரன்**

கல்வெட்டுக்களின் இறுதிப்பகுதியின் ஒரு பிரிவு **“ஓம்படைக்கிளவி”**என்று அழைக்கப்படும்.

**எனக்கொரு ஆத்மா இருக்கிறது**

**தீபிகா.**

எனக்கொரு அப்பா இருந்தார்.
எறிகணைத் துண்டொன்றின் பசி
அவரை என்னிடமிருந்து பறித்துண்டது.

எனக்கொரு அக்கா இருந்தாள்.
காம இராணுவம் கதறக் கதற
அவளை கசக்கியெறிந்து புதைத்தது.

எனக்கொரு அண்ணா இருந்தார்.
விடுதலையின் பெயரால்
அவரை நான் விதைத்து வந்தேன்.

எனக்கொரு தங்கை இருந்தாள்.
எந்தச் சுவடுமேயில்லாமல்
அவள் காணாமல் போகச் செய்யப்பட்டாள்.

எனக்கொரு தம்பி இருந்தான்.
எல்லா துன்பங்களும் தாங்காமல்
ஒருநாள் தற்கொலை செய்து கொண்டான்.

எனக்கொரு நாய்க்குட்டி இருந்தது.
துப்பாக்கி ஏந்திய நாயொன்று
அதை ஈவிரக்கமின்றி சுட்டுக் கொன்றது.

எனக்கொரு காதலி இருந்தாள்.
எதிர்பாராத இடப்பெயர்வில்
முகவரியற்று அவள் தொலைந்து போனாள்.

எனக்கொரு அம்மா இருந்தாள்.
மூழ்கிப் போன ஏதிலிப் படகொன்றிலிருந்து
அவள் மூச்சற்று கரை ஒதுங்கினாள்.

எனக்கொரு ஆத்மா இருக்கிறது.
எதிர்பார்ப்புக்களற்று எதற்கும் தயாராய்
அது இப்போது காத்திருக்கிறது.

# வன்னிப்பெருநிலப்பரப்பில் ஆய்வுக்குட்படுத்தப்படாத தொல்லியல் மையங்கள் பகுதி -2

தியாகராஜா திபாகரன்
ஊடகவியலாளர்
லண்டன்.

## ஆயிலடி

நைனாமடு கனகராயன்குளம் வீதியில் நைனாமடுவிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் மேற்குப் பக்கமாக ஆயிலடி என்கின்ற தொன்மையான கிராமத்தின் ஆரம்பப் பகுதியில் வீதியின் இருமருங்கிலும் ஏராளமான கறுப்புச், சிவப்பு மட்பாண்டங்களையும், அளவிற் பெரியனவான செங்கற்களையும் காணமுடியும். வீதியின் வலது புறத்தில் தனியாருக்குச் சொந்தமான காணியொன்றினுள் வீதியிலிருந்து 50 மீற்றரினுள் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் சில கருங்கற் கற்றூண்களையும், நிலத்தினுள் அமிழ்ந்து போன செவ்வகக் கற்பாறைத் துண்டுகளையும் காணமுடியும். அத்தோடு அதற்கு அருகாமையில் நீல்வளைய வடிவில சில உருளைக் கற்பாறைகள், ஓரிடத்தில் நிலத்தினுள் அமிழ்ந்த நிலையில் காணப்பட்டது. இப்பாறைக் கற்தொகுதி அவதானிக்கப்பட்ட அன்றைய நாளில் என்னவாக இருக்குமென்பதை ஊகிக்க முடியாவிட்டாலும் இன்றைய நிலையில் அனேகமாக அது சங்ககாலத்தையொட்டிய காலத்திற்பகுறிய பரல் உயர்பதுகை சவ அடக்கம் (ஈமைத்தாழி) அம்சமாகவே எண்ணத்தோன்றுகின்றது. ஏனெனில் மேற்குறிப்பிட்ட இடம் கரடியான்குளம் என்றழைக்கப்படுகின்ற ஒரு புராதன குளத்தின் அந்தத்தில் இருப்பதுவும், திட்டையான ஒரு பகுதியாகவும் அதே நேரத்தில் இச்சுற்றுப் புறத்திலேயே ஒரு இயற்கை வழிபாட்டுத்தளம் (இராக்கியன்) இருப்பதுவும் அதன் மறுபக்கத்தில் இதன் தொடர்ச்சி போன்றே ஆயிலடிக் குளக்கட்டு ஆரம்பமாவதும் இரண்டு குளங்களின் கட்டுகளுக்கு நடுவில் வீதி செல்வதுவும் இச்சூழலின் அமைவிடம் மண்ணின் தன்மை, போன்றவற்றயை அவதானிக்கின்ற போது அங்கு மிகப்பழைய குடியிருப்பு இருந்திருக்கிறது என்பதை உணரலாம். இப்பகுதியில் தொல்லிய் ஆய்வுகள் மேற்கொள்வதன் மூலமே மிகச்சரியான வரலாற்றுத் தகவல்களைகூறமுடியும். அனேகமாகப் பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய தொல்லியற் தடயங்களை பெறுவதற்கான சாத்தியங்களே அதிகம் உள.

## கனகராயன்குளம்

வவுனியா மாவட்டத்தில் ஏ9 வீதியில் உள்ள கனகராயன்குளம் கிராமத்தில் வீதியிலிருந்து மேற்குப்புறம் 600 மீற்றர் தொலைவில் கனகராயன்குளம் குளத்தின் குருங்கையுடன் ஒட்டியதாக குளக்கட்டின் தென் அந்தத்தில் ஐயனார் ஆலயம் ஒன்றுள்ளது. அவ்வாலயத்தின் வளாகத்தில் நிறுத்திய நிலையிலும், சரிந்த நிலையிலும் சில கருங்கற்றூண்கள் காணப்படுகின்றன.




இன்னும் பல கற்றூண்கள் மண்ணினுள் புதையுண்ட நிலையில் காணப்படுகின்றது. மற்றும் புராதன கட்டடங்களின் வாயிற்படி தட்டையான கற்பாறையின் அரைவட்ட வடிவ அமைப்பு ஒன்றும் காணப்படுகிறது. மேலும் இவ்விடத்தில் காணப்படுகின்ற கட்டட இடிபாடுகள் மண்ணினுள் புதையுண்ட நிலையிலேயே காணப்படுகிறது. இக்கட்டட இடிபாட்டினை ஜே.பி.லூயிஸ் (1890) என்கின்ற பிரித்தானிய அரசின் நிர்வாக அதிகாரி பௌத்த மடாலயத்திற்கான சின்னம் போன்றேயிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இதனை அவ்வாறு ஊகிப்பதற்கான வலுவான சான்றுகள் இல்லை. அத்தோடு இவ் கட்டட இடிபாடுகிளிலிருந்து 100 மீற்றர்கள் தூரத்தில் கிழக்குப் புறமாக இருக்கின்ற பற்றைக்காட்டினுள் சோழர்கால கலையம்சம் கொண்ட ஒரு சிவலிங்கத்தின் ஆவுடையார் பகுதி இருந்தது. இது நிலமட்டத்திலிருந்து கிட்டத்தட்ட மூன்றரை அடி உயரங்கொண்டதாகவும், சராசரி 4 நீள, அகலங் கொண்டதாகவும் இருந்தது. இறுதியாக 2008 வரை அதனைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. தற்போது அதற்கு நேர் எதிரே முன்னுள்ள கமநல சேவைத் திணைக்களக் கட்டத்தில் தற்போது பொலிஸ் நிலையம் இருப்பதனால் இவ்ஆவுடையார் பகுதி தற்போது என்ற நிலையில் உள்ளது என்பது பற்றி கூறமுடியாதுள்ளது.

## தேசத்தின் குரல்

நெடுமாறன்



தேசத்தின் குரல் இது
எங்கள் தேசியத்தின் குரல்
விடுதலையின் இராஜபறவை
இனத்தின் முதல் இராஜதந்திரி
வெள்ளைப் புறாவாய் வலம் வந்து
வரிப்புலிக்கு வலிமை சேர்த்த
கருத்துப் புலி
களத்தில் அடித்தாலும் - இவன்
கருத்தில்தானே இடியே விழும் எதிரிக்கு
அறிவின் தகமை கண்டு
அஞ்சுமே பகைமை
இங்கிலீசுக்காரனும் பேச்சாற்றல்
கண்டு மெய் சிலிர்த்து நிற்பான்
பேச்சு மேசையில்
போட்டு உடைப்பான்
பொய் வேசங்களையும்,
போலி
முகத்திரைகளையும்
பார்வதியின் பிள்ளைக்கு
பக்குவமாய் எடுத்துரைக்கும்
பகுத்தறிவாளன்
விடுதலையின் பொக்கிஷம்
வீரத்தின் ஆணிவேர்
விழுதுகள் பரப்பிய விருட்சம்
விடையில்லாத கேள்வி நீ
காலத்தால் வெல்லமுடியாத உன்னை
காலனவன் நோய் கொண்டு
வென்றுவிட்டான்
வெந்து துடிக்கின்றோம்
விதைத்து எட்டு ஆண்டு
கடந்தாலும்
விடுதலை பயணத்தில்
வீர வரலாறு பால அண்ணனே...!!

## காய்க்காத மரங்கள்.

ரதிமோகன்
டென்மார்க்.

பூத்துக்குலுங்கிய
எம் வாழ்வு
மரங்களின்றியே
வனமாகிப்
போனதிங்கே.....!

பூகம்பம் வந்தது
புயலும் கூட வந்தது
சாய்க்கப்பட்டோம்
பறிக்கப்பட்டோம்
அனைத்தையும்...!

அனாதரவாக
இன்று
ஆசைகள் ஆயிரம்
ஆழ்மனதில்
சுமந்து.....!

விழிவழியோடும்
கண்ணீருடன்
விடைகாண
முடியாத தனி
மரங்களாய்...!
வழி தேடும்
காய்க்காத மரங்கள்....!

ஏற்றம் காணா
வாழ்வு
குடியேறியும்
மின்சாரம்
இன்றியே
சஞ்சாரம்
செய்கிறது.....!

தொழில் தேடி
வாழ்வு தேடி
அலையும்
நாங்கள
சரிந்தும் சாயாத
மரங்கள்...!

உணர்வுகளை
தொலைத்த
பட்ட
மரங்கள்.....!

பூத்துக் காய்க்க
காத்திருக்கும்
காய்க்காத
மரங்கள்....!

## சனவரி

**சனவரி 1- 1883 - இலங்கையின் தமிழர் பகுதிகள் வடக்கு, கிழக்கு என இரண்டாகப் பிரிக்கப்பட்டன.**

**சனவரி 2- 2006 - திருகோணமலை மாணவர்கள் படுகொலை: இலங்கையின் கிழக்கே திருகோணமலை, நிலாவெளி கடற்கரையில் 5 தமிழ் மாணவர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.**

**சனவரி 3- 1974 - யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தொடங்கியது.**

# மனிதர்கள் சாவதற்காக பிறப்பதில்லை

நிரோசன் யாழ்பாணம்

வாழ்வில் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கணத்திலும் பல பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர் கொள்கிறோம். இந்த பிரச்சினைகளுக்கெல்லாம் தற்கொலைதான் தீர்வு என்று ஆனால் மனித குல வரலாற்றையே நாம் திரும்பி பார்க்க முடியாமல் போய் விடும். உண்மையில் இந்த பிரச்சினைகளும் சவால்களும்தான் சுவாரஸ்யமிக்கதாக ஆக்குகிறது. பிரச்சினைகளற்ற மனிதன் பிணத்திறகு சமானம். மேலே வானம், கீழே பூமி, பூத்துக் குழுங்கும் சோலைகள்,சலங்கை கட்டிக் கொண்ட அருவிகள், பச்சைக் கட்டிக் கொண்ட பசு மரச் சோலைகள் இவைஅனைத்தும் எமக்காக படைக்கப்பட்டவையே. ஐந்தறிவு கொண்ட விலங்குகள் கூட அன்றாடம் பல பிரச்சினைகளை எதிர் கொண்டுதான் வாழ்கின்றன. ஆனால் மனிதன் மட்டும்தான் பிரச்சினை வந்து விடுமோ என்று சிந்தித்து சிந்தித்து பீதியடைகின்றான், அஞ்சி நடுங்குகின்றான், ஓடி ஒளிகின்றான், பிரச்சினையை எதிர் கொள்ள திராணியற்று உயிரை மாய்த்துக் கொள்கிறான். அண்மைக் காலமாக பல்கலைக் கழக மாணவரிடையே அதிகரித்து வரும் தற்கொலைகள் மனித உயிர்களின் பெறுமதியை கேள்விக்குள்ளாக்குவதாக அமைகிறது. எனவே இவ்வாறு அதிகரித்து வரும் தற்கொலைகளுக்கான அடிப்படை குறிதது ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தற்கொலைக்கான அடிப்படைகள் குறித்து ஆராய முன்னர் தற்கொலை என்ற பததம் குறிக்கும் உள்ளார்ந்த அர்த்தத்தினை விளங்கிக கொள்ளல் இன்றியமையாதது.

தற்கொலை என்பது தற்காலிகமான பிரச்சினைக்காக மனிதன மேற்கொள்ளும் நிரந்தரமான தீர்வு எனக் கூறலாம். இச் செயற்பாடானது மனித வாழ்வினை முடித்து வைக்கிறதொன்றாகவும், மனித வாழ்விற்கு சவாலானதொன்றாகவும் அமைகின்றது. “மனித உயிரி ஒன்று தாங்க முடியாத எதிரான மனவெழுச்சிகளாலுந்தப் பட்டு அதன் வெளிப்பாடாக ஏற்படுகின்ற இறுதியான துலங்களின் பேறே தற்ொலை” என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

“தற்கொலை” என்ற எண்ணக் கருவை விளங்கிக் கொண்ட நிலையில் இவ்வாறான முயற்சிகளுக்கான மூல காரணங்களை விலாவாரியாக நோக்குவது சாலச் சிறந்தது.

தாழ்வு மனப்பான்மை: தன்னைப் பற்றிய தாழ்வான சுய மதிப்பீடுடையவர்கள் இலகுவில் மனமுடைந்துபோய் தம்மால் தனித்து நின்று பிரச்சினையை எதிர் கொள்ள முடியாத போது இவ்வாறான உயிரை மாய்த்துக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டு விடுகின்றனர். இத்தகையோர் எதற்கும் பிறரைச் சார்ந்தே பழக்கப் பட்டமையால் திடீரென ஏற்படுகின்ற பிரச்சினையை சமாளிக்கும் ஆற்றலின்றி உடனடித் தீர்மானமாக உயிரை இழக்கத் துணிகின்றனர். இத்தகைய நபர்களிடம் காரணமின்றி அ டிக்கடி அழுதல், அளவுக்கு மீறிய பயம், பதற்றம், நடுக்கம், கவலை , எதிலும் திருப்தியின்மை, எதிர்மாறான சிந்தனைப் போக்கு போன்ற அறிகுறிகள் காணப்படும். எனவே இத்ததையவர்களை நண்பர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள் மிகக் கவனமாக அணுகுதல் வேண்டும். இவர்கள் தம்மைப் பற்றிய தாழ்வான சுய மதிப்பீடடையவர்களாகவிருப்பதனால் இவர்களைக் கையாள்பவர்கள் இவர்களிடமுள்ள குறைகளைத் தவிர்த்து நிறைகளை அழுத்திக் கூறி, அவர்களது உயிர் மதிப்பானது என்பதையும், அவர்களால் பிறருக்கு பயனுடையவர்களாகவும், நம்பிக்கையுடையோராகவும் வாழ முடியும் என்ற உணர்வை விதைத்தல் வேண்டும். முடிந்தவரை இவர்களை சுயமாகத் தீர்மானம் எடுக்கக் கூடிய வழிமுறைகளை பயிற்றுவித்தல் அவசியம்.



தனிமையுணர்வு: தனிமை என்பது ஒரு மனிதனை எத்தகைய விதத்திலும் மாற்றி விடலாம். பொதுவாக சிலருக்கு பலர் அருகிலுருக்கும்போது கூட இவ்வாறான தனிமையுணர்வு ஏற்படுவதுண்டு. வெளிப்பிரதேசங்களிலிருந்து பல்கலைக் கழகத்தில் கற்கும் மாணவர்கள் தனிமையுணர்வால் அதிகம் பாதிக்கப் படுபவர்களாகவுள்ளனர். அரவணைக்க அம்மா, தடடிக் கொடுக்க அப்பா, தம்பட்டம் அடிக்க சகோதரர்கள் என உறவுக் கூட்டிற்குள் வாழ்ந்த மாணவர்கள் விடுதிகளிலும், வாடகை வீடுகளிலும் வாழ நேரும் போது இவர்களை ஒரு விதமான பயம் தொற்றிக் கொள்கிறது. தான் சார்ந்த அனைத்து விடயங்களையும் தானே கவனித்துக் கொள்ள வேண்டிய நிலை, புதிய சூழல், புதிய மனிதர்கள், புதிய கலாச்சாரம், புதுவிதமான பண்பாடுகள் இவையனைத்தும் சேர்ந்து குறித்த மாணவனை அந்நியப் படுத்தி விடுகிறது. இதன் காரணமாக காரணமற்ற பயம், பீதி, குழப்பம் இவர்களை சூழ்நது கொள்கிறது. இவ்வாறான குழப்பம் நிறைந்த சூழலில் ஏற்படுகின்ற சிறியதொரு பிரச்சினை கூட தீர்கக் முடியாததாக விசாலமானதாக தெரிகிறது. இதனால் இவர்கள் இலகுவில் மனமுடைந்து போய் இந்த அத்தனைக் குழப்பங்களையும் உயிரை மாய்த்துக் கொள்வதனூடாக இல்லாது செய்து விடலாம் என்ற முடிவுக்கு வந்து விடுகின்றனர். ஆனால் இவ்வாறு வெளிப் பிரதேசங்களிலிருந்து வரும் மாணவர்கள் ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது

அவசியம். நீண்ட எதிர்காலம் குறித்த சிந்தனைகளோடும், கற்பனைகளோடும் பிள்ளையை பல்கலைக் கழகம் அனுப்பி விட்டு என் பிள்ளை திரும்பி வந்து என்னை காப்பாற்றப் போகிறது என்ற பெற்றோரின் எதிர்பார்ப்பில் மண்ணைப் போடுவதை விட நாம் பெற்றோருக்கு செய்யும் துரோகம் வேறு எதுவுமே இருக்க முடியாது. இத்தகைய மாணவர்கள்பால் ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் அதிக சிரத்தை எடுக்க வேண்டியதொரு அவசியமுண்டு.

காதல் தோல்வி: கண்டதும் காதல்,கதைத்ததும் காதல், காணாமல் காதல், கண்ணில்லாத காதல் என்று அற்ப சொற்ப காரணங்களுக்கெல்லாம் 'காதல்' என்று அர்த்தம் கற்பித்துக் கொண்டு காலத்தை வீணடித்துக் கொண்டிருப்பது இன்றைய கால இளைஞர்களின் வேடிக்கையான போக்காக மாறியுள்ளமை கவலைக்குரியதாகவே உள்ளது. பாலினக் கவர்ச்சி என்பது பொதுவாக எல்லா மனிதர்களுக்கும் ஏற்படுகிறதொன்றே. இதனை 'காதல்' என்று கௌரவமான பெயர் கொண்டழைப்பது போன்றே இவ்வுறவு தொடர்பாக மிகையான எதிர்பார்ப்புக்களையும், கனவுகளையும் காண ஆரம்பிக்கின்றனர். திரையுலக காதல் மன்னர்களையும், காதல் கன்னிகளையும் பார்த்து பழக்கப்பட்ட நாம் நடைமுறை வாழ்விலும் இத்தகைய மிகைப் படுத்தப் பட்ட காதலை எதிர் பார்ப்பதனால் விளைவு தோல்வியில் முடிகிறது.

"ஒரு முறைதான் காதல் என்பது தமிழர் பண்பாடு, அந்த ஒரு முறைதான் எதுவென்பது கேள்வி இப்போது, வருவதெல்லாம் காதலித்தால் வாழ்வதெப்போது? அந்த வாழ்க்கையையே காதலித்தால் தெரியும் அப்போது.." என்ற பாடல் வரிகள் இன்றைய கால இளைஞர்களுக்கு மிகவும் பொருத்தமானதே. இந்த மிகையான கற்பனைக் காதல் விளையாட்டுக்களில் ஈடுபடும்போது தன்னை விட அழகி உலகத்தில் இல்லை என்ற நினைப்பில் பெண்களும், தன்னைவிட வீரன் இல்லையென்ற நினைப்பில் ஆண்களும் சாகக்கூட துணிந்து விடுகின்றனர். காதலனுக்காக, காதலிக்காக, காதலுக்காக எதையும் செய்யத் துணியும் இளைஞர்கள் ஒன்றை சிந்திக்க வேண்டியது அவசியம். உண்மையில் காதலில் தோல்வி மட்டும்தான் பெறுமதியானது. காதல் வெற்றியின் எல்லை எது? காதலித்த எத்தனை பேர் திருமண பந்தத்தில் இணைகிறார்கள் ஆனால் அந்த வெற்றியை யாரும் ஏன் காதலித்வர்கள் கூட பேசுவதில்லையே. அவ்வாறெனின் காதல் வெற்றியில் எதுவும் இல்லையென்றுதானே அர்த்தம். இந்த ஒன்றுமே இல்லாத காதல் வெற்றிக்காகத்தான் உயிரை மாய்த்துக் கொள்கிறோமா என்று சிந்தித்துப் பாருங்கள். காதல் திருமணமாக இருக்கட்டும் நிச்சயத் திருமணமாக இருக்கட்டும் வாழ்க்கை என்று வருகின்றபோது நடைமுறையில் இரண்டும் ஒன்றுதான். திருமணத்திற்கு முன்னர் வைக்கின்ற 'சீதன' கெடுபிடிகளாகட்டும், திருமணத்தின் பின் குழந்தை பேற்றிற்காக வைத்தியசாலையில் வரிசையில் நிற்பதாகட்டும் எலலோருக்கும் ஒரே நடைமுறைகள்தான். அவ்வாறே திருமணம் முடித்து பிள்ளைகளைப் பெற்றாயிற்று, நீங்கள் பெற்றோர்களாயிற்று. இப்போது உங்கள் பிள்ளை காதலித்தால் தடுக்கப் போகிறீர்களா? தட்டிக் கொடுக்கப் போகிறீர்களா? நிச்சயம் தடுக்கத்தான் போகிறீர்கள் இதுதான் நடைமுறை யதார்த்தம்.




பரீட்சையில் தோல்வி: காதல், கன்னியர், போதை, சினிமா என அற்ப சொற்ப விடயங்களுக்கெல்லாம் முதன்மை கொடுத்து பரீட்சை தொடர்பில் சிரத்தை எடுக்காது இறுதியில் பரீட்சையில் தோல்வி என்றவுடன் துவண்டு போய் விடுகிறார்கள் இன்றைய பல்கலைக் கழக மாணவர்கள். உண்மையில் இன்றைய இளைஞர்களைப் பொறுத்தவரை பல்கலைக் கழகம் என்பது பட்டப் படிப்பை முடிப்பதற்கு என்பதைவிட வாழ்க்கையை சுதந்திரமாக அனுபவிப்பதற்கு என்கிற சிந்தனைப்போக்கே காணப்படுகிறது. இதனால் கேளிக்கைகள், கூத்துக்களில் நேரத்தை முழுவதுமாக வி-ரயம் செய்து விட்டு பின்பு உட்கார்ந்து அழுவதில் என்ன பயனா? "ஆரிய கூத்தடினாலும் காரியத்தில் கண்ணாயிரு" என்ற வாய் மொழியை மறந்துவிடுவதனால் ஏற்படுகின்ற துர்ப்பாக்கியம்தான் இது. நாம் பல்கலைக் கழக வாழக்கையை சுதந்திரமாகவும், சுவாரஸ்யமானதாகவும் அனுபவிக்க வேண்டியது அவசியம்தான் ஆனால் எமக்கென்று ஒரு குடும்பம், சகோதரர்கள், உறவினர்கள் உண்டு, எமக்கென ஓர் இலட்சியம், குறிக்கோள் உண்டு. இவையனைத்தையும் மறந்து விட்டு வழி தவறிப் போகும் போது பரீட்சையில் தோல்வி ஏற்படுகிறது. பரீடசைக்கு முன்னர் குடும்பத்தைப் பற்றியோ, எதிர்காலத்தைப் பற்றியோ சிந்திக்காது பரீட்சையில் தோல்வி ஏற்பட்டவுடன் எதிர்காலத்தை எண்ணி பதற்றமடைவதால் இவர்களால் என்ன செய்வதென்று தெரியாத கையறுநிலை ஏற்படுகிறது. எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் தன்னை மாய்த்துக் கொள்ள முனைகின்றனர். பரீட்சையில் தோல்வி என்றவுடன் தன்னால் இயலவில்லை என்ற எண்ணம் ஏற்பட்டுவிடுகிறது. உண்மையில் பரீட்சை என்பது எமது இயலுமையை வெளிப்படுத்துவதோ, இயலாமையை வெளிப்படுத்தவதோ அன்று. அது ஒரு அளவுகோள் அவ்வளவுதான். பரீடசை என்பது இயலுமையை நிர்ணயிப்பதாக இருப்பின் இலங்கையில் வருடா வருடம் க.பொ.த. உயர் தரத்திற்கு இரண்டு இலட்சம் பேருக்குமேல் தோற்றுகின்றனர். ஆனால் அவர்களில் வெறும் 22000 24000 பேர்வரைதான் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெறுகிறார்கள். அவ்வாறெனின் எஞ்சிய அத்தனை பேரும் இயலுமையற்றவர்களாக கருதி

விட முடியுமா? சிந்தித்து செயலாற்ற வேண்டியது அவசியம். எமக்கு இயலாமை ஏற்படுவதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம், ஆனால் எம்மால் இயலும் என்பதற்கு ஒரே ஒரு காரணமாவது இருக்கும் அந்த ஒரு காரணத்தை மட்டும் நினையுங்கள் நிச்சயமாக சாதிக்க முடியும்.

கடன் தொல்லை, வறுமை - வறுமை கடன் தொல்லை போன்றவற்றாலும் பல்கலைக் கழக மாணவர்கள் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். வெளிப்புறப் பிரதேசங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு யாழ் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை முதலாம் வருட மற்றும் இறுதியாண்டு மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்கப்பட்டாலும் இடையில் இருக்கின்ற இரண்டு வருடங்களுக்கும் வாடகை அறைகளிலேயே தங்கி இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது. இந்தநிலையில் மாதா மாதம் 2000-2500 வரையிலான வாடகைப் பணம் செலுத்த வேண்டி உள்ளது மேலும் இம்மாணவர்கள் தமக்குரிய உணவு, உடை, ஏனைய அத்தனை செலவுகளையும் கவனித்தாக வேண்டியுள்ளது. அரசாங்கம் வருடத்துக்கு வழங்கும் 25000.00 ரூபா பணம் 10 மாத வாடகைக்கு மட்டுமே போதுமானதாக அமைகின்றது. உணவு ஏனைய கல்வி சார் செயற்பாடுகளுக்குத் தேவையான பணத்தினைப் பெற்றுக் கொள்வதில் வறுமை மிகுந்த குடும்பங்களில் இருந்து வருகின்ற பல மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அவசரத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள கடன்களை வாங்குகின்றார்கள். பின்பு அதை திரும்பிச் செலுத்த முடியாத நிலையில் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். மன உளைச்சல் அதிகரித்து மன அழுத்தம் ஏற்படுகின்றது. இதனால் கடன் தொல்லையில் இருந்து தப்பிக்க வழி தெரியாத நிலையில் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சிக்கின்றனர். எனவே இவ்வாறான மாணவர்கள் குறித்து சமூகம் அக்கறையுடன் செயற்பட வேண்டியுள்ளது. சமூக நலன் விரும்பிகள், நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் இத்தகைய மாணவர்களுக்கு உதவுவதன் மூலம் இவர்களுக்கு சிறந்ததொரு எதிர்காலம் அமைய துணை செய்தல் அவசியமாகின்றது.

இவை தவிரவும் மனதுக்குள் முரண் பட்ட எண்ணங்களின் ஆக்கிரமிப்பு, மன அழுத்தம், குற்றஉணர்வு, ஏமாற்றம், நம்பிக்கைத்துரோகம், மனவிரக்தி, குடும்பத்தில் சந்தேகம், தான் மற்றவர்களுக்கு சுமையென நினைத்தல், பலர் முன்னிலையில் அவமானப்படுதல் போன்ற பல காரணங்களினால் பல்கலைக் கழக மாணவர்கள் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். எது எவ்வாறாயினும் தற்கொலை என்பது கொலைக் குற்றமாகவே கருதப்படுகின்றது. அதுவும் பல்கலைக் கழகத்தில் பல வருடங்கள் கற்று பட்டப்படிப்பு பூர்த்தியாகும் தருவாயில் இவ்வாறான கோழைத்தனமான முடிவுகளை எடுப்பதானது குறித்த பல்கலைக் கழகத்தின் பெயருக்கும் கலங்கத்தை ஏற்படுத்துவதாகவே அமைகிறது. இலங்கையில் கல்வி வழங்குகின்ற உயர் தாபனமான பல்கலைக் கழகமே நாட்டின் தலை சிறந்த தலைவர்களை உருவாக்குவதோடு இங்கு கற்கும் மாணவர்களே சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டியவர்கள் ஆனால் இவர்களே இவ்வாறன தவறான முடிவுகளை எடுப்பதானது உயர் கல்வி தொடர்பானதொரு நம்பகமற்ற தன்மையை சமூகத்தில் ஏற்படுத்தி விடுகின்றது. எனவே நாம் உயிரோடிருந்து சாதிக்காவிட்டாலும் பரவாயில்லை தற்கொலை என்ற தவறான முடிவை எடுத்து பெற்றோருக்கும் நண்பர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் கற்ற பல்கலைக் கழகத்திற்கும் அவப்பெயரை ஏற்படுத்திவிடாது பாதுகாக்க வேண்டியது மாணவர்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். உலகத்திலேயே அதியுயர்ந்த வேதனை என்றால் அது மரணம் ஒன்றே. அந்த ஒன்றுக்குப் பயந்தே ஒவ்வொருவரும் ஓடிக்கொண்டிருக்கின்றோம். ஆனால் அந்த மரண வேதனையை அனுபவிக்கத் துணிந்து விடுபவர்களுக்கு வாழ்வை எதிர் கொள்ளும் தைரியம் ஏன் இல்லாமல் போய்விடுகிறது. நிதானமாக சிந்தியுங்கள் பிறந்த மனிதன் என்றாவது ஒருநாள் சாகத்தான் போகின்றான் இது நிச்சயமானது தான். ஆனால் மனிதர்கள் சாவதற்காகப் பிறப்பதில்லை சாதிப்பதற்காகவே பிறக்கின்றனர். எந்தவொரு பிரச்சினைக்கும் உடனடியாக உணர்வுபூர்வமாக சிந்தித்து செயலாற்றாது அறிவு பூர்வமாக சிந்தித்து தீர்மானம் எடுத்தல் சிறந்தது.



**மௌ டம் (Mau tam) என்பது 48 ஆண்டுகளுக்கு ஒருமுறை மூங்கில் மரங்கள் எல்லாம் ஒருசேரப் பூத்து மடியும் ஒரு விந்தையான சுற்றுச்சூழல் நிகழ்வைக் குறிக்கும், மூங்கிற் சாவு எனப்பொருள்படும் மிசோ மொழிச் சொல்லாகும். இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களில் ஒன்று மிசோரம். இம்மாநிலத்தின் நிலப்பகுதியில் மூப்பது விழுக்காடு பகுதியில் மூங்கில் காடுகள் உள்ளன. மௌடம் நிகழ்வின்போது மெலொகன்னா பாக்கிஃபெரா (Melocanna baccifera) என்ற மூங்கில் இன மரங்களில் பெரும்பாலானவை ஒருசேரப் பூக்கின்றன. இதைத் தொடர்ந்து பெருச்சாளிகள் அளவுக்கதிகமாகப் பெருகிவிடுகின்றன. இதன் விளைவாக பிளேக் நோய் பரவ வாய்ப்புண்டாகிறது.**

# இரகசியஎண்களுடன் வாழ்தல்

நடராஜா வினோதரன்
லண்டன்

அலாம் அடிக்கிறது நேரம் ஐந்து இருபது 1385 என்ற இலக்கத்தை கொடுத்து அதை நிறுத்துகிறேன். படுக்கைக்கு அடியில் என் ஐபோணை தேடுகிறேன் அது 1985 என்ற பாஸ்வேட்டை வேண்டி நிற்கிறது. நேற்றுத்தான் புதிதாய் போட்ட பாத்றூம் கதவின் பாஸ்வேட் SINGH2 அல்லது 4 என்ற சந்தேகத்தில் அருளின் 1978 பாஸ்வேட் அறையை திறக்கிறேன். அருள் அங்கு இல்லை. ஓம் மறந்தே போனேன் அவர் ஐந்து மணிக்கே வேலையில் இணைந்திருப்பார். நான் ஆறுமணிக்கு என் பணியிடத்தில் நிற்க வேண்டும் . வீட்டுகாரனுக்கு போன் பண்ண ஒரு மாதிரி இருந்தாலும் என்ன செய்ய ஆபத்துக்கு பாவமில்லை. அவன் சொன்னான் S1964 என்று. இந்தளவில் என்னிடம் இருப்பது இன்னும் பத்து நிமிடங்களே, 5555 க்கு அழைத்தேன் மூன்று நிமிடத்தில் டக்சி வத்தது. அவனது பணத்தை 1900 என்ற பின் கோட் போட்டு ATM இல் எடுத்து கொடுக்கிறேன் . இப்ப ஆறு ஒன்று! எனக்காக ராங்கர் காத்து நிற்கிறான் இன்னும் சில நிமிடங்கள் பிந்தியிருந்தால் கெட்லூபிசுக்கு ஈமேயில் பறந்திருக்கும். தப்பிச்சான் தமிழன் !
1912 என்ற எனது தனிப்பட்ட பாஸ்வேட் போட்டு றைவருக்கு ஒரு கொஸ்ரா கோப்பி கொடுக்கிறேன். இவ்வளவு நேரமும் இறுகியிருந்த முகம் தளர்கிறது. சிரிப்பு கூட வருகிறது. இதற்கிடையில் இரவு வேலை முடித்து பொலிசின் போக தயார். 0224 என்ற இலக்கத்துடன் இன்றைய றில் திறபடுகிறது. டிப் றீடிங் எல்லாருக்கும் தெரியும் விதமாக 8989 எழுதப்பட்டிருப்பது சுலபம்.இரண்டு டிப் றீடிங் எடுத்தாச்சு. றைவர் கொண்டு வந்த எரிபொருளை எனக்கு அனுப்பப்பட ஈமேயிலுடன் சரி பார்க்க 1010 என்ற இலக்கத்தை அழுத்துகிறேன். அளவைகள் சரியான போதும் நிறப்பு நிலைய திறப்புகளை காணவில்லை . குவ்ப்பியை பேசிக்கொண்டே 0000 என்ற அவனது கிளீனிங் பொருட்கள் வைக்கிற அறை திறக்கிறேன். அங்கு தொங்கிய திறப்புகளுடன் திரும்ப... எனது றில்லை ஏற்கனவே சிஹா பயன்படுத்திக்கொண்டு இருக்கிறாள். ரெயினியான அவளுக்கு பேப்பொயின்ரின்1988 என்ற இலக்கம் தெரியாது. காலை நேரம் சனம் கியூ அடிக்கிறது. இப்போதும் இருட்டி கிடப்பதால் ராங்கர் லைட்டை அழுத்த முன்னர் எலற்றிக்கபேட் பாஸ்வேட் 1234 என்பதாயுள்ளது. ராங்கரை அனுப்ப முன்னம் அவள் தவறுதலாக எக்சிற் கதவை திறந்துவிட்டாள். எலாம் சத்தம் காதை பிளந்தது. 2283 என்ற இலக்கத்தை பருக்க கட்டுப்பட்டது. திரும்பவும் இன்றைய நாளுக்கான பணப்பெட்டி பாஸ்வேட் **** என்றிருந்தது. அதை திறந்து காசை எண்ணுகிறேன். இதற்கிடையில் கமேராவில் பொலிஸ் வருவது தெரிகிறது. அன்றிரவு யாரோ கத்தியை வீசிவிட்டார்களாம். அதை பார்க்க வேண்டுமாம். அதற்கென்ன பத்தே நிமிடத்தில் 801801 என்ற பாஸ்வேட் போட்டு சீடியை தயார் பண்ணினேன். அதற்குப்பிறகு வழமைபோல சில கையெழுத்துகள். பன்னிரண்டு மணிக்கு முதல் பூமிஸ் வரும் பாஸ்வேட்டே தெரியாத அவர்களின் பெட்டிக்குள் எரிபொருள் பணத்தை நிரப்பிய பின் சிறிய ஓய்வு கிடைக்கலாம் . அப்ப ஞாபகம் தட்டுது ஐயோ இரவுக்கு சில்லறைகள் இல்லையே. 2484 என்ற இலக்கத்தில் சில்லறை பொட்டியை திறந்து நூறு பவுணை எடுத்துக்கொண்டு வங்கிக்கு போகிறேன் . வங்கியில் நிற்க அருண் அடிக்கிறார் அவருக்கு நீசா வின் C2994 என்ற இலக்கமும் கோஸ்கட்டர்79884 என்ற முகவர் எண்ணும் தேவைப்பட்டிருந்தது. இது வருட இறுதி மட்டும் அல்ல கிறிஸ்துமஸ் நேரம் என்பதால் எல்லா இறுதி நாள் ஓடர்களையும் கொடுக்க சங்கேத எண்களை என் மேசையில் பரப்புகிறேன். கார் கேயார் M1231 ,டீஎச்எல்9087 லொத்தர்6060, ரேற்ஸ்A2084 கோம்கெயார்5676,மாப்1888
கொஸ்ரா 1900 ஏறத்தாள எல்லா ஓடர்களும் கொடுத்தாச்சு. இந்நேரம் நிறைய பூக்கள் விற்கப்படும் என்பதால் 07711404065 என்ற சிறி அண்ணைக்கும் ஒரு கோல் போட்டாச்சு. அப்பதான் கொண்டுவந்த சாப்பாடு 2.00 என்ற எண்ணில் சூடாகிக் கொண்டிருக்க யாரோ வெளியில் வழுக்கி விழுந்தார்கள் 999 அடிக்க அவர்கள் 101 ற்கு இணைக்க அம்புலன்ஸ வந்தது. வழுக்கி விழுந்தார் இளைப்பாறிய ஊழியர் அறை பாஸ்வேட் 1984 . பாருங்கள் இன்றைக்கென்று குப்பை அள்ளும் வாகனமும் வரவில்லை . 9999 இலக்கத்துக்கு நல்ல திட்டு கொடுத்தேன் . இதற்கிடையில் குறைந்தது நூறு தடவைகள் றில்லுக்கு பறந்து கியூவை கலைத்திருப்கேன். சிஹா போகிறாள் நான் எட்டுமணி வரை(இரவு) எண்களுடன் மூழ்குகிறேன். இப்போது அம்பாலி வந்து தனது5067 என்ற இலக்கத்தை போட எனது0224 ஓய்வுக்குவருகிறது.

**பிரிந்தவலி**

அம்மா நான்
அழுது பிறந்தேனோ -இல்லை
பிறந்து அழுதேனோ தெரியவில்லை
ஆனால் இன்று வரை
அழுகிறேன் உனை பிரிந்து
-நிலக்ஷன்-

# தாவூத்தின் கதை

**பகுதி-02** **தி.திருக்குமரன்**

ஓர் அழகான இளம் பெண்ணின் செல்லப் பேச்சில் இருந்து அலுங்கிக் குலுங்கி வழுக்கி விழும் சொற்களைப் போல நெழிந்தும் வளைந்தும் ஆடி ஆடிச் செல்கிற அவர்கள் இருக்கும் முகாமுக்கு அண்மையில் இருக்கும் ஆற்றின் கரையில் மாலைவேளைகளில் அவனும் தாவூத்துமாய்ப் போயிருந்து அவர்களுடைய பால்ய காலக் காதல்க் கதைகளைப் பேசிக் கொண்டிருப்பார்கள் விடைகள் இல்லாமல் நிண்டு செல்கின்ற அகதி வாழ்க்கையில் இப்படியான நினைவு மீட்டல்களே அவர்களுக்கு ஆறுதலாக இருந்தது. இங்கே வந்து ஐந்து ஆண்டுகள் ஆகி விட்டது இனியும் என்னால் குடும்பத்தை பிரிந்து இருக்க முடியாது சுட்டாலும் பரவாயில்லை நான் நாட்டுக்குப் போகப் போகிறேன் என்று கொஞ்ச நாளாகவே அதீத வெறுப்பில் தாவூத் அடிக்கடி புலம்பிக் கொண்டிருந்தான். மூன்று வாரங்களின் முன்பு காலையில் வழமை போலவே அவர்கள் நால்வருமாக அவரவர் கணணிகளில் ஊர்ச் செய்திகளைப் பார்த்துக் கொண்டிந்த போது தாவூத்துக்கு கடிதம் வந்திருப்பதாக வெஸ்கி வந்து சொல்லி விட்டுப் போனான் மதியம் சாப்பிட வரும் போது எடுக்கிறேன் என்று சொல்லி விட்டு தாவூத் ஏதோ மும்முரமாக செய்தி பார்த்துக் கொண்டிருந்தான். ஏதோ முக்கிய செய்தியைப் பார்த்திருப்பான் போல மிகவும் பதட்டமாகி அவன் கைத்தொலை பேசியில் இருந்து யாருக்கோ அழைப்பெடுத்தான் சர்வதேச அழைப்புக்குக் காசு போதாதாம் இந்த நேரத்தில் பார்த்து போனில் காசில்லை BRO தொலை பேசியை ஒருக்காத் தரமுடியுமா என்று சமரனிடம் இருந்து தொலை பேசியை வாங்கி அடிக்கிறான் அடிக்கிறான் அழைப்புக் கிடைக்கவில்லை. கண் கொஞ்சம் கலங்கி இருந்தது கைகள் நடுங்கிக் கொண்டிருந்தது ஏன் தாவூத் என்ன ஆச்சு ஏன் இவ்வளவு பதட்டம் என்று சமரன் கேட்டபோது இல்லை BRO மனைவியின் எண்ணுக்கு எடுக்கிறேன் கிடைக்குதில்லை அதுக்கேன் பதட்டப்படுகிறாய் தாவூத் அவள் மகனை பள்ளிக்குக் கூட்டிக்கொண்டு போயிருப்பாள் அது தான் யோசிக்காதே கொஞ்ச நேரம் கழித்து திரும்பவும் அழைக்கலாம் என்று சமரன் சமாதானப் படுத்தினான். இல்லை BRO நேற்று சோமாலியாவில் என்னுடைய வீட்டுக்கு அருகில் உள்ள சந்தையில் குண்டு வெடித்திருக்கிறது Sunday Market என்ற படியால் மனைவியும் குழந்தையும் மலிவுப் பொருட்கள் வாங்கப் போயிருப்பார்கள் நேற்று நானும் பேசவில்லை இன்று அடிக்க தொலை பேசி வேலை செய்யுதில்லை அது தான் பயமாக இருக்கிறது என்றான் அதன் பின் பல தடவை முயற்சி செய்தும் அவளின் தொடர்பு தாவூத்துக்குக் கிடைக்கவில்லை. மாலை ஊரில் இருந்து தாவூத்தின் எண்ணுக்கு அழைப்பு வந்தது அவன் என்ன நினைத்தானோ தெரியவில்லை என்னெண்டு கேள் என சமரனிடமே தொலை பேசியைக் கொடுத்தான் அதில் தாவூத்தோடு முன்னர் இயக்கத்தில் இருந்த போராளித் தோழன் தான் பேசினான்.

தாவூத் பதட்டத்தில் பிறப்புறுப்பை கையால் கசக்கியபடி சமரன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றான் ஒரு நிமிடம் தான் விசயத்தைச் சொல்லி விட்டு சொன்னவன் வைத்து விட்டான். சமரனுக்கு என்ன சொல்லதென்று தெரியவில்லை தாவூத்தை கட்டி அணைத்து தோள்களை இறுகப்பற்றினான். அந்தக் குண்டு வெடிப்பில் தாவூத்தின் மனைவியும் குழந்தையும் உடல் சிதறி இறந்து போனதை நினைக்க சமரனுக்கும் ஊர் நினைவு வந்து தலை கிறுகிறுக்கத் தொடங்கியது

அறையில் இருந்த நண்பர்கள் இருவரும் தாவூத்தை கட்டி அணைக்கப் போனார்கள் அவர்கள் இருவரையும் உதறி விட்டு நிலத்தில் குந்தி இருந்து இரண்டு கைகளாலும் தரையில் குத்தி அழுதான் கட்டில் இரும்புச் சட்டத்தில் தலையை அடித்தான் கடைசி வரை என்னைத் தெரியாமலேயே என் மகன் போய் விட்டானே அல்லா.. எனக்காவே இவ்வளவு காலமாய்க் காத்திருந்த மனைவியையும் மகனையும் என் வாழ் நாளில் இனி எப்போதுமே பார்க்க முடியாத படிக்கு செய்து விட்டாயே என்று கத்திக் கொண்டு கத்தியை எடுத்து கழுத்தை அறுக்கப் போனான். எல்லோருமாக அவன் கைகளைப் பிடித்து மடக்கி கத்தியை பிடுங்க திமிறிக் கொண்டு மாடியில் இருந்து குதிப்பதற்கு ஓடினான். அவனை அறியாமலேயே காலால் சிறு நீர் வழிந்து கொண்டிருந்தது. மூவருமாகச் சேர்ந்து ஒருவாறு அவனைப் பிடித்து அமத்திக் கட்டிலில் கிடத்தினார்கள் அன்று முழுக்க அவன் அப்படியே சித்தப் பிரமை பிடித்தவன் போல இடைக்கிடை கத்தி அழுவதும் பின்னர் அமைதியாகி விடுவதுமாகப் படுத்திருந்தான். இரவு இரண்டு மணிவரை அவர்கள்அவனுக்குப் பக்கத்திலேயே இருந்தார்கள் திடீரென்று எழுந்த தாவூத் கணணியைத் திறந்து ஸ்கைப்பில் உள்ள Snap Shot பகுதியில் மனைவியுடனும் மகனுடனும் பேசும் போது எடுத்த படங்களை திரும்பத் திரும்பப் பார்த்தான் BRO! இனியொரு போதும் என் மனைவியும் மகனும் ஸ்கைப்புக்கு வரமாட்டார்கள் இல்லையா? என்று ஈனஸ்வரம் நிறைந்த குரலில் சமரனைப் பார்த்துக் கேட்டான். எச்சிலை வில்லங்கமாக விழுங்குவதைத் தவிர வேறெதுவும் சமரனால் அப்போது சொல்ல முடியவில்லை. அழுதழுது களைத்து தாவூத் அப்படியே தூங்கி விட்டான்.

சமரனுக்குத் தூக்கமே வரவில்லை

தேனீர் குடிப்பதற்காக கீழே இறங்கிப் போனான். இது தாவூத்துக்கு குடிவரவு திணைக்களத்திடம் இருந்து வந்த கடிதமென அலுவலகத்தில் இருந்த வெள்ளையன் கொடுத்தான் இப்போது இதைக் கொண்டு போய் அவனிடம் கொடுக்கும் நிலைமை இல்லை என்பதாலும் அமைச்சில் இருந்து வந்த படியால் ஏதும் முக்க்கியமாக இருக்கும் என்பதாலும் சமரனே அதை உடைத்துப் பார்த்தான் அதில் அவனுடைய அகதி அந்தஸ்த்து மறுக்கப் பட்டிருப்பதாகவும் அவன் நாட்டில் இப்போது பிரச்சனை தணிந்து விட்டதால் அங்கே போவதால் அவனுக்கு எந்த வித உயிராபத்தும் இல்லையென்றும் விரும்பினால் 15 நாட்களுக்குள் மேன் முறையீடு செய்யலாம் என்றும் குறிப்பிட்ட நாட்களுக்குள் செய்யாவிட்டால் நாடுகடத்தப் படுவார் என்றும் சொல்லப் பட்டிருந்தது. இந்த நாட்டைப் பொறுத்தவரை அதிகாரிகளின் முடிவையே அதிகமாக நீதி மன்றம் கவனத்தில் எடுத்திருக்கிறதென்பதால் இந்தக் கடிதம் Deportation Order க்கான ஒரு முன் ஆயத்தம் தான் என்பதை அவர்கள் அகதி அந்தஸ்த்து கொடுப்பதற்கு மறுத்துச் சொல்லி இருக்கும் காரணங்களை வைத்து சமரன் புரிந்து கொண்டான். தாவூத் இருக்கும் மன நிலையில் இதையும் எப்படிக் கொடுப்பது? கொடுக்காமலும் இருக்கமுடியாது ஏனென்றால் இரண்டு கிழமைக்குள் வழக்கறிஞரைச் சந்தித்து மீண்டும் இந்த முடிவை மறுக்கும் வகையில் இவன் இனி நாட்டுக்குப் போக முடியாதென்பதற்கு சரியான காரணங்களை பெற்றுக் கொடுக்க வேண்டும் நாட்டில் இவன் பற்றி வந்த பத்திரிகைச் செய்திகளை எல்லாம் எங்கெங்கோ எல்லாம் தேடி எடுத்து முறையான இடத்தில் மொழி பெயர்த்து தாவூத்தின் மனைவி தான் இது நாள் வரை அனுப்பிக் கொண்டிருந்தாள் இப்போது தாவூத்துக்கு அவளதும் மகனதும் இறப்பைத் தான் காரணமாகக் காட்ட வேண்டி இருக்கப் போகிறது. சோமாலியாவில் ஒரு சான்றிதழ் எடுப்பதென்றால் மிகவும் சிரமம் நிறைய லஞ்சம் கொடுக்க வேண்டும் என்று தாவூத் சொல்லி இருக்கிறான். தவிரவும் அவர் தன் இயக்கத் தொடர்புகளை இதற்கெல்லாம் பயன்படுத்தவும் விரும்பமாட்டான். இப்படியாக தனக்குள்ளேயே பேசிக்கொண்டு சமரன் அறைக்கு வந்தான் அழுது களைத்துப் போய் தாவூத் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான்.

விடிந்து விட்டது மாலையில் எழுந்து பேசுவோம் கண்ணைச் சுழட்டுகிறது நான் தூங்கப் போகிறேன் தாவூத்தை ஒரு இடமும் தனியே விட வேண்டாம் பார்த்துக் கொள்ளுங்கள் என்று மற்றைய இரு நண்பர்களிடமும் சொல்லி விட்டு சமரன் தூங்கி எழுந்து பார்த்த போது வழமைக்கு மாறாக நண்பர்களுடன் போய் அளவுக்கு அதிகமாகக் குடித்திருக்கிறான் போல நாற்காலியில் அங்காலும் இங்காலுமாக சரிந்தபடி பெரு மழைக்குப் பின்னர் குளைகளில் இருந்து வழிகின்ற நீரைப் போல துளித்துளியாக கண்களில் இருந்து நீர் உருண்டு விழ ஸ்கைப்பில் இருந்த தன்னுடைய மனைவி மகனது படங்களை பெரிதாக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான் இப்போது கடிதம் பற்றி எதுவும் சொல்ல வேண்டாமென மற்றைய இரு நண்பர்களும் சமரனுக்கு கண்ணால் ஜாடை காட்டினார்கள் மறு நாள் காலை சமரன் மெதுவாக அவனிடம் பேச்சுக் கொடுத்த போது எல்லாவற்றுக்கும் ம்.. ம் எனத்தான் தாவூத் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்

பேச்சினிடையே உனக்கு குடிவரவுத் திணைக்களத்திடம் இருந்து கடிதம் வந்திருக்கிறது பிரச்சனை இல்லை மேன் முறையீடு செய்ய வேண்டும் வெளிக்கிடன் இருவருமா சட்டத்தரணியிடம் போவோம் சமரன் மெதுவாகச் சொன்னான். எதுவும் பேசாமல் கடிதத்தைத் தரச் சொல்லிக் தாவூத் கையை நீட்டினான். வேகமாக ஒவ்வொரு பக்கமாகத் தட்டி வாசித்தான் சமரனைப் பார்த்து கண்ணைச் சுருக்கி உதடுகளைத் திறக்காமல் வெறுப்புக் கலந்த ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு அப்படியே கடிதத்தைத் தூக்கி சுவரில் வீசி அடித்தான் கடிதம் பற்றி எதுவும் இனித் தன்னிடம் பேச வேண்டாம் என்று சொல்லி விட்டு முகாமில் நின்ற ஆடையுடனேயே புறப்பட்டு வெளியில் போய் விட்டான் அதன் பின் ஒவ்வொரு நாளும் வரும் போது நிறை வெறியில் தான் வருவான் அவ்வளவாகச் சாப்பிடுவதும் இல்லை அரசியல் பேச்சுக்களிலும் நக்கல்களிலும் கலகலவென இருந்த அந்த அறை எதையோ பிடித்து இழுத்து நிறுத்தி விட்டதைப் போல அமைதியாகவே இருந்தது அவனில்லாத நேரத்தில் தான் நண்பர்கள் ஏதும் பேசுவர்கள் ஆனாலும் முந்தின கலகலப்பு இப்போது இல்லை அவனுக்கு வந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 15 வேலை நாட்கள் நெருங்கிக் கொண்டே இருந்தது தாவூத்துக்கு அதில் எந்த அக்கறையும் இல்லை வியாழக்கிழமை அவன் மகனின் 7 வது பிறந்த நாள் அவனுக்கு அனுப்புவதற்கென பொலிசிடம் பிடிபடாமல் களவாக போனமாசம் முழுக்க மிகக் குறைந்த ஊதியத்தில் இரவிரவாக கடினமாக வேலை செய்து கொஞ்சப்பணம் சேர்த்து வைத்திருந்தான். அந்தப் பணத்தில் தான் இப்போது தினமும் குடி குறிப்பிட்ட நேரத்தில் வந்து சாப்பிடா விட்டால் முகாமில் சாப்பாடு கிடைக்காதென்பதால் எப்போதும் வெளியில் தாராளமாக வைக்கப் பட்டிருக்கும் சீசும் முட்டையும் தான் அவனது குடிக்கு உணவாக இருந்தது, ஏற்கனவே உனக்கு பருத்த உடல் கொலொஸ்ரோல் வேறு கண்டபாட்டுக்கு கொழுப்பு சாப்பிடாதே என சமரன் பல முறை சொல்லியும் தாவூத் காதில் வாங்கவில்லை மகனின் பிறந்த நாளன்று மிக அதிகமாகக் குடித்திருக்கிறான் போல கதவில் பொருத்தப் பட்டிருக்கும் மெஷினில் அதைத் திறப்பதற்காக பயன்படுத்தும் Card I சரியாக

அதற்குள்ளே போட முடியாமல் தள்ளாடி விழுந்து விட்டான். அடுத்து வந்த நாட்களிலும் இதே குடி தான் ஆனால் அழுவதோ கத்துவதோ இல்லை பேசாமல் வந்து படுத்து விடுவான்

இன்றைக்கும் குடித்து விட்டுத் தான் வந்தான் மகன் பிறந்த நாளுக்கு அனுப்ப என வாங்கி இருந்த பார்சலை உடைத்து அதற்குள் இருந்த விளையாட்டுக் காரை வெளியில் எடுத்து கட்டிலில் உருட்டி உருட்டிப் பார்த்த படி கட்டிலில் குறுக்குப் பக்கமாக கால் நீட்டி இருந்து கொண்டு அப்படியே பின்னால் உள்ள சுவரில் சாய்ந்த படி கண்களை மூடிக் கொண்டு விசும்பிக் கொண்டிருந்தான், நேரம் ஆகிக் கொண்டிருந்தது இப்பதான் வந்த படியால் சாப்பிட்டிருக்க மாட்டான் கீழே ஏதும் இருந்தால் வாங்கி வருகிறேன் என்று நண்பர்களிடம் சொல்லி விட்டு சாப்பாட்டைச் சூடு காட்டி மேலே எடுத்து வந்து சாப்பிட்டுப் படு தாவூத் என்று சமரன் சாப்பாட்டை நீட்டினான். அவன் பதில் எதுவுமே பேசவில்லை விசும்பல் கூட நின்றிருந்தது போகும் போது இருந்ததைப் போலவே அப்படியே கண்களை மூடி கால் நீட்டி சுவரில் சாய்ந்திருந்தான் இரெண்டு மூன்று தடவை சாப்பிட்டுப் படு என்று சமரனும் நண்பர்களும் சொல்லியும் அவன் பதிலேதும் சொல்லாமல் அப்படியே சாய்ந்திருந்தான் சாப்பாட்டுக் கோப்பையை அவன் கட்டிலுக்கு முன்னுள்ள மேசையில் வைத்து விட்டு சரி உனக்கு விரும்பின நேரம் எழும்பிச் சாப்பிட்டுப் படு என்று சொல்லி விட்டு கைத்தொலைபேசியில் மௌனத்தில் விளையாடும் மனச் சாட்சியே பாடலை சமரன் திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டிருந்தான். தூக்கம் வருகிறது விளக்கை அணைக்கட்டுமா காலையில் நேரத்துக்கு எழுந்து போகவேண்டும்என்லெபனான்நண்பன் கேட்டான் சரி அவன் பசித்தால் சாப்பிடுவான் தானே என விளக்கை அணைத்து விட்டு எல்லாரும் படுத்து விட்டார்கள் சமரனுக்கு தூக்கம் வரவில்லை அங்காலும் இங்காலுமாக திரும்பிப் படுத்துக் கொண்டிருந்தான் நேரம் காலை 3 மணி ஆகி விட்டது தண்ணீர் குடிக்க எழுந்த சமரன் எதேச்சையாகப் பார்த்த போது இன்னமும் படுக்காமல் தாவூத் அப்படியே சுவரில் சாய்ந்தபடியே இருந்தான் மனசு கேட்காமல் படுக்கையால் எழுந்து கம்பளிப் போர்வையைப் போர்த்திய படியே அவன் பக்கத்தில் சென்று சாப்பிடாவிட்டாலும் பரவாயில்லை சரிந்து கட்டிலில் ஒழுங்காப் படு என்று சமரன் அவன் தோளைப் பிடித்தான். தலை இடது பக்கம் சரிந்தது குடித்து விட்டு வந்தாலும் தாவூத் இப்படித்தான் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருப்பான் என்றாலும் இன்றைக்கு ஏனோ சமரனுக்கு உடல் நடுங்கத் தொடங்கியது மின் விளக்கைப் போட்டு எழும்புங்கள் என்று மற்ற நண்பர்களைப் பார்த்துச் சத்தமிட்டான் தன்னுடைய இனத்தில் யாரும் இறந்து விட்டால் குரங்குகள் எப்படி அங்காலும் இங்காலும் ஓடி மூக்கில் கைவைத்தும் நெஞ்சில் காதை வைத்தும் பார்க்குமோ அது போலவே அவர்கள் மூவரும் மூக்கருகில் கைவைத்தும் நெஞ்சருகில் காதுவைத்தும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். 999 எண்ணுக்கு நண்பன் ஒருவன் அழைக்க சிறிது நேரத்தில் மருத்துவரும் பொலிசும் வந்தார்கள்

நெஞ்சில் அமுக்கியும் வாயில் ஊதியும் என்னென்னவோ எல்லாம் செய்து பார்த்த மருத்துவர் பொலிசாரத் திரும்பிப் பார்த்து கீழுதட்டை வெளியே பிதுக்கி இமைகளை மூடித் திறந்தார் வந்திருந்த நான்கு பொலிசாரும் தொப்பியைக் கழற்றினார்கள். குடிவரவுப் பொலிசாரும் வந்து விட்டார்கள் செய்தி அறிந்த முகாமில் உள்ள அத்தனை பேரும் கூடி வந்து வாசலில் நின்றார்கள் தமக்கும் கூட இங்கேயே இப்படி நடந்து விடலாம் என்கிற மரணபயம் அவர்கள் முகத்தில் நிழலாடிக் கொண்டிருந்தது அவர்களிடம் நடந்தவை பற்றி விசாரணை எடுத்து விட்டு தாவூத்தின் உடலை ஸ்ரெச்சரில் வைத்து அறைக்கு வெளியே கொண்டு போவதற்காக பொலிசார் தூக்கிய போது கோபம் மிகுந்த தொனியில் 'உங்கள் குடிவரவுப் புலனாய்வு அதிகாரிகள் மிகவும் சிறப்பாகப் பணி புரிகிறார்கள் இனி இவனை உங்கள் விருப்பப் படியே எந்தப் பிரச்சனையும் இன்றி நாடு கடத்தலாம் என சமரன் கத்தினான். அது மட்டுமே அப்போது அவனால் முடிந்தது உடலை அவர்கள் தூக்கிக் கொண்டு போய் அம்புலன்ஸ் வண்டியில் ஏற்ற அதைப் பார்த்து அழுதபடி முகாமே வாசலில் கூடி நின்றது அவன் உடலோடு வண்டி புறப்பட்டு விட்டது பூமியின் ஏதோ ஒரு கண்டத் தகட்டின் எங்கோ ஒரு மூலையில் இருந்து வந்த தாவூத்தும் இன்னொரு கண்டத் தகட்டின் ஏதோ ஒரு மூலையில் இருந்து வந்த சமரனும் அவர்கள் எதிர்பார்த்திராத வேறொரு கண்டத் தகட்டின் எங்கோ மூலை ஒன்றில் சந்தித்து பழகிய நட்புறவின் கதை இன்றோடு முடிந்து விட்டது யாரும் எதுவுமே பேசாமல் அவரவரின் அறைகளுக்கு திரும்பிக் கொண்டிருந்தார்கள் சமரன் தன்னுடைய அறைக்கு வந்த போது முகாம் நிர்வாகம் தாவூத்தின் படுக்கை உறை தலையணை உறை என்பவற்றைக் கழற்றிக் கொண்டிருந்தார்கள் அவனுடைய பொருட்கள் எதுவும் வேண்டுமானால் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள் தாவூத் தன் மகனுக்கு அனுப்புவதற்கென வாங்கி கடைசியாகக் கட்டிலில் உருட்டிப் பார்த்துக் கொண்டிருந்த காரை சமரன் எடுத்து வைத்துக் கொண்டான் . ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டார்கள் எடுத்தது போக மீதிப் பொருட்களையும் அவனது ஆடைகளையும் குப்பைகள் போடுகின்ற கறுப்புப் பையுள் போட்டு முகாம் நிர்வாகம் எடுத்துச் சென்றது தாவூத்தின் ஸ்கைப்பில் அவனது மகன் மனைவியின் படங்கள் இனிக் காலாகாலத்துக்கும் அப்படியே திறக்கப் படாமல் கிடக்கும் சமரனுக்கு தூக்கம் வரவில்லை மற்றைய இரு நண்பர்களும் ஏதும் பேசாமல் முகத்தை போர்வையால்

இழுத்து மூடிக்கொண்டு படுத்திருந்தார்கள் அவன் படுத்திருந்த கட்டிலைப் பார்க்க முடியாமல் சமரன் மறுபக்கம் திரும்பிப் படுத்தான். ஏதோ யோசனையில் சற்று அசந்து விட்டு திடுக்குற்று முழித்த அவன் மனசு கேட்காமல் தாவூத் கட்டிலைத் திரும்பிப் பார்த்தான். அதில் புதிதாக வந்த இன்னொரு அகதி படுத்திருந்தான் அவன் மிக இயல்பாகத் தூங்கிக் கொண்டிருந்தான் தாவூத் படுத்திருந்த சூடு ஆறுவதற்குள்ளாகவே முகாம் நிர்வாகம் இன்னொரு அகதியை அதில் போட்டிருக்கிறது 'காலம் எப்போதுமே இப்படித்தான் எதுவுமே நடவாதது போல இடைவெளி-களை மிக வேகமாக இட்டு நிரப்பிக் கொண்டே இருக்கும்' உள்ளங்கையால் நெற்றியில் இறுக்கி அடித்து விட்டு சமரன் மீண்டும் திரும்பிப் படுத்தான். என்றோ ஒரு நாள் எனக்கும் இப்படி ஏதும் இங்கேயே நடந்து விடலாம் என்ற எண்ணம் அவனுக்குள் ஓடத்தொடங்க இதயம் மீண்டும் வேகமாக அடிக்கத் தொடங்கியது. ஆனால் முன்னரைப் போல அவன் பயந்து எழுந்திருக்கவில்லை மூக்கிலிருந்து கசியும் ரெத்தம் துளித் துளியாக படுக்கை உறையிலும் தலையணையிலும் விழுந்து கொண்டிருந்தது அதை எழுந்து துடைக்கவோ கண்ணாடியின் முன்னால் போய்ப் பார்க்கவோ சமரன் விரும்பவில்லை. மூளையும் மனமும் தனித் தனியாகக் கழன்று விட்டது போல அப்படியே அசையாமல் சுருண்டு படுத்திருந்தான்.



**பெலூகா காவியா எனும் உணவு கிலோ ஒன்றுக்கு 25,000 அமெரிக்க டாலர்கள் விலை கொண்டது.**

## என் சொந்த மொழியில்....

ரஷ்யமொழி மாற்றுக்கவிதை

மொழிமாற்றம் **சுகி சுவிஸ்**

நான் ஒரு நகரத்தில் பிறந்து வளராதவன்
என்பது என்றும் என்னை மிகவும்
எரிச்சலடையச் செய்யும் ஒன்று என்பதால்
நான் நகரத்தைப் பற்றியே எப்பொழுதும்
கனவு கண்டேன்
நகரத்தை நேசித்தேன்
நான் முதல் எழுத்தை எழுதத் தொடங்கியபோது
அந்த என் முதல் எழுத்து நகரின் சின்னமாய்....!
அவை வானத்தில், வானவில்லின் எல்லா
வர்ணங்களிலும் ஒளிர்ந்தன
நியோன்வெளிச்சத்தில் அவை நடனமாடிக்
கும்மாளமிட்டன.
அந்த வானம் எவ்வளவு பெரிதாக இருந்த போதும்
எல்லாமே முடங்கிய நிலையில் ,
மாடுகள், கோழிகள், பூனைகள், தூசி, கற்கள், வெம்மை,
மழையில் கறைபடிந்த தெருக்கள்...
என என் கிராமத்தைப்போல் இல்லாமல்...!
நான் மீண்டும் மீண்டும்
நகரத்தைப் பற்றியே கனா கண்டேன்.
கனவுகளின் மீட்சியில்
என் பள்ளிப் படிப்பு கிராமத்தில் தொடர்ந்தது.
ஆசானின் எழுதுபலகையில் கடுமையான குறிப்புக்கள்
இப்படித்தான் இருக்கவேண்டும்
இப்படித்தான் எழுதுகருவி பிடிக்கவேண்டும்
இப்படித்தான் நிமிர்ந்து இருக்க வேண்டும்
இப்படித்தான் அழகாக எழுதவேண்டும்...!
அழகாய் எழுதுதல், பிழையின்றி எழுதுதல்.
எழுத்துப் பிழையின்றி ஆசிரியரின் வழிகாட்டலில்
முதலாவது சொல்வதெழுதல்.
முதலில் பொருளற்ற எழுத்து வடிவங்கள்,
பின் அழகற்ற, கருத்தற்ற வரிகளின் உள்ளடக்கம்
முதலாவது எழுத்துரு,
அதைத் தனியனாய் எழுதியது!
கையெழுத்து... !
உன் வாழ் நாள் முழுதும் உன்னுடன் பயணிக்கப்
போகும்,
உன்னை அடையாளப்படுத்தும்
கையொப்பம்!
அந்த என் ஒப்பத்தின் முதல் ஓவியம்.
ஆனால் நகரம்...!
நாளடைவில் நான் கண்ட நகரத்தின் கற்பனைச்
சித்திரங்கள்
காணாமல்போயின...
எழுதுதல் என்பது என்னைக் கவர்ந்தது
எழுதும் போது என் எண்ணங்களைப்
புரியும் படி தர முடிந்தது
அதனுள்ளே என் கையெழுத்தை
என் சொந்த மொழியில் இனம்கண்டேன்.
எழுத்து என்பது ஒரு வடிவம் - ஒலி வடிவம்
அதை நான் ஓர் வெளியில் மிதப்பதைப் பார்த்தேன்
ஒன்று பலதாகி
மீண்டும் மீண்டும்
அவைகளின் மிதப்புக்கள்...!
ஒரு கோட்டிலோ அல்லது வட்டமாகவோ
அவை தமக்குள்ளே ஒன்றுடன் ஒன்று சேர்ந்தன
வேறுவேறாக வெடித்துச் சிதறின...!
இப்பொழுது அவை தமக்கான ஒலிவடிவை
இழக்கின்றன... !
நான் இருட்டிற்குள் இருந்துகொண்டு எழுதுகின்றேன்
அவை இப்போதும் மிதந்துகொண்டிருக்கின்றன
காலத்தின் நீட்சியில் ஒவ்வொரு தாளிலும்
எழுதப்படும் எழுத்திலிருந்து வரையப்படும் ஓவியமாக
அவை என்றும் ஒளிர்ந்துகொண்டே இருக்கும்
மொழியாக.....!!!

# கலையும் வாழ்வும்

ஒளிப்பதிவாளர்இயக்குனர் - சங்கர் தேவா
நேர்காணல் - ப.பார்தீபன்

ஈழத்து சினிமாக் கலை இன்று, மண்ணில்புதைந்து விண்னை முட்டவரும் முளையாக எம் கண்முன்னே துடிக்கின்றது. எத்தடங்கள் வரினும் அதை ஒரு பொருட்டாக மதிக்காது தமக்கான பயணத்தை துனிவோடு முன்னெடுக்கின்றது.அக்கலைக் குழுமத்தில் ஒளிப்பதிவாளர் ,இயக்குனர்,கதாசிரியர் ,எனப் பன்முகத்தன்மையோடு பயணிக்கும் கலைஞன் **சங்கர் தேவா**வுடனான ஒர் உரையாடல்



**வணக்கம் ஈழக்கலைஉலக வாழ்வில் உங்கள் பிரவேசம் பற்றியும் உங்கள் பங்களிப்பு பற்றியும் சற்று விரிவாக அறியத்தாருங்கள் ?**

2000 ம் ஆண்டளவில் ரிரிஎன் (அன்றைய ரிரிஎன்) தொலைக்காட்சியில் இணைந்து அங்கு படத்தொகுப்பாளராகவும் (Editing) ஒளிபரப்பாளராகவும்(Broad Casting) பணியாற்றிக்கொண்டிருந்தேன். 2005ம் ஆண்டளவில் நல்லூர்ஸ்தான் நடாத்திய சங்கிலியன் விருது 1 வது படவிழாவில் எனது நண்பன் மன்மதன் பாஸ்கர் இயக்கிய நதி எனும் குறும்படம் மூலம் படத்தொகுப்பளராக(Editing) இத்திரைத்துறைக்கு அறிமுகமானேன். இந்தத் திரைப்படம் கான் திரைப்படவிழாவில் குறும்படப்பிரிவில் காட்சிப்படுத்தப்பட்டது குறிபிடத்தக்கது. தொடர்ந்து அவர் இயக்கிய படங்களுக்கு படத்தொகுப்பாளராக இருந்தேன். அதுபோன்று குறும்படமியக்கிய இயக்குனர்கள் ஐ.ஏ.ஜனா. தயாளன். சுதன். தமிழ்ப்பிரியன். N.S.ஜனா ஆகியோரது படங்களுக்கும் படத்தொகுப்பு செய்தேன். தொடர்ந்து றொபேட் அண்ணாவின் அகரம் படைப்பகத்தின் தயாரிப்பில் அவரின் உதவியுடன் கண்ணீர் தேசம் படம் மூலம் இயக்குனராக அறிமுகமானேன்.

**எவ்வாரான நேக்கத்திற்காக நீங்கள் சினிமாத்துறையினை உங்கள் தெரிவாக தேர்ந்தெடுத்தீர்கள் ?சினிமா துரைசார்ந்து ஏதேனும் தெழில்முறைக்கற்கையை கற்றீர்களா? தனிப்பட்ட ரீதியில் ஈழத்து சினிமாத்துறையில் உங்கள் இலக்கு எதுவாக இருக்கும் ?**

எனக்கு தெரிந்த தொழில் நுட்பங்களை வெளிப்படுத்தும் வாய்ப்பாகவும். மேலும் சினிமாத்துறையில் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற பேரவாவினாலும் எனது நண்பர்களுடன் இணைந்து செயல்படத்தொடங்கினேன். பின்னர் தான் எமது இனத்தின் அவலப்பதிகளையும் பதிவுசெய்யவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில். கண்ணீர் தேசம். நிர்க்கதி போன்ற படங்களை இயக்கினேன்.

பிரத்தியேகமாக எதையும் கற்கவில்லை நான் பிரான்சில் கணினி அடிப்படை அறிவைக் கற்றபின்பு ரிரின் தொலைக்காட்சியில்பணியாற்றியபோதுஎன்தேடல்கள்மூலம் கற்றுக்கொண்டேன். இன்னும் கற்றுக்கொண்டிருக்கிறேன்.

இனிவரும் சந்ததியினருக்கு வரலாற்றுத்தேடல் ஏற்படும் போது திரைப்பட பதிவென்பது முக்கிய ஆவணமாக இருக்கும். அந்த அடிப்படையிலேயே எம்மினத்தின் வரலாற்றுமிக்க வெற்றிகளையும் மறக்கமுடியாத வலி-களையும் பதிவு செய்யவேண்டும் என்பதே எனது இலக்கு.

**சமூகம் என்பது ஆண்பெண் என்ற இரு பால-ாரின் சாமாந்தரத்தைப்பேனும் ஓர்கட்டமைப்பு அந்தவகையில் ஈழத்து சினிமாத்துறையில் நடிகைகளின் பிரவேசம் மிகக்குறைவாகவே இருக்கின்றது. அவ்வாறு நடிக்கவந்தாலும் அவர்கள்மீதான சமூகப்பார்வை சற்று இங்கிதம் அற்றதாகவே இருக்கின்றது.இதை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள். காலப்போக்கில் ஈழத்து சினிமாவில் அது நிவர்த்தி செய்யப்படுமா ?உங்களுக்கு பிடித்த நடிகையார் ?**

நீங்கள் சொன்னது போல் இங்கிதமற்றதாகவே இருக்கிறது. நிவர்த்தியாகும் என்றே நம்புவோம். இயல் இசை நாடகம் தமிழரின் கலைகள். இதில் முதல் இரண்டையும் ஏற்கும் சமூகம் மூன்றாவதை ஏன் ஊக்குவிப்பதில்லை?

**ஒரு கதை அதை எழுதும் ஆசிரியனாலேயேஉயிரோட்டமாகப் பார்க்கமுடியும் எனும் நிலையில் நீங்கள் ஒரு கதை ஆசிரியன் தன் கதையை திரையில் இயக்குவதற்கும்.ஒரு இயக்குனர் பிறிதொருவரிடம் இருந்து தனக்குக்கிடைக்கும் கதையை இயக்குவதற்கும் இடையிலான நடைமுறையினை எவ்வாறு பார்க்கின்றீர்கள் ?**

சில வேளைகளில் சாதகமாகவும் பாதகமா-கவும் அமையக் கூடும். ஆனால் எனக்கு சாதகமாகவே அமையப்பெற்றது உதாரணம். என்னுடைய கதையான GOD IS DEATH I சொல்லலாம். ஒரு அனுபவமிக்க இயக்குனரால் இயக்கப்படும் போது அது மெருகேறுகின்றது.



இதற்கு இயக்குனர் சதாபிரணவனைச் சொல்லலாம்.

**பொதுவாக சினிமாக் கதைகள் நடைபெற்று முடிந்தஒரு நிகழ்வின் அல்லது தாக்கத்தின் ஆவனத்தேடலாகவே பெரும்மாலும் வெளிவருகின்றது. அதேவேளை எதிர்காலத்தை முற்கூட்டி ஊகித்து நகரும் தன்மை மிக மிகக் குறைவாக இருக்கின்றது அந்தவகையில் ஒரு பொழுது போக்கு கதையல்லாது எம் இனம்சார்ந்த உண்மைக் கதையான நீங்கள் எழுதி இயக்கிய கண்ணீர்தேசம்பற்றி கூறுங்கள்.எதற்காக இவ்வாறான ஒரு கதையை தேர்வு செய்தீர்கள், ?**

முன்னர் சொன்னது போல் எனது அடி மனதில் இருக்கும் எம்மினத்தின் அவலங்களும் வலிகளும் சொல்லப்பட வேண்டியவை. பதிவாக்கப்படவேண்டியவை. அதுபோன்று இக்கதையும் நான் கண்டு நோக்கிய அவலமான வலிதான்.

**அவ்வாரான ஒரு கதைக்கு நடிகர்கள் மத்தியிலும் முதலீட்டாளர் மத்தியிலும். பார்வையாளர் மத்தியிலும் எவ்வாறான வரவேற்பு கிடைக்கப்பெற்றது ?முதலீடு சார்ந்து எம் ஈழத்து சினிமாக்கலை எந்தப் படிநிலையில் நிற்கின்றது ?**

புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தின் நாவலர் விருதுக்கான குறும்பட விழாவில் பங்கு பற்றிய இப்படம் நடிகர்கள் மத்தியிலும் பார்வையாளர் மத்தியிலும் மறுக்கமுடியாத ஒன்றாக ஏற்றுக்கொள்ளபட்டது. முதலீட்டாளர்கள் என்பது இதுவரை சினிமா துறைக்கு கிடைக்கப்பெறவேயில்லை. இது ஒரு எங்களுக்கான மிகப்பெரிய பின்னடைவும் வருத்தத்துக்குரியதும்.

**ஈழத்துபடைப்பாளிகளால் (புலத்திலும் ஈழத்திலும்) நாளந்தம் புதிய புதிய குறும்படங்கள் வந்தவண்ணமே உள்ளது அதனை நெறிப்படுத்தி முகடு**

**மக்களுக்கு தரமான படைப்புக்களை வெளிப்படுத்துவதற்கு. கலைஞர்களின் வாழ்வாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் ஏதேனும் அமைப்பு இயங்குகின்றதா ?இருப்பின் அதன் செயற்பாடு எவ்வகையில் நடைபெறுகின்றது ?**

உங்கள் கேள்வியில் உள்ளார உள்ள ஏக்கம் தொழில் நுட்ப கலைஞன் என்ற ரீதியில் எனக்கும் இருக்கிறது. பல இடங்களில் பாராமுகமாகவே இருத்தப்பட்டுள்ளோம். அந்த வகையில் கண்ணீர் தேசம் திரைப்படத்தின் உருவாக்கத்திற்கு முழுத்துணையாகவும் தயாரிப்பாராகவும் இருந்த றொபேட் அண்ணாவிற்கும்- ஒளிப்பதிவு செய்த ஜனேசன் மற்றும் குமார். நடிகர்கள் பாஸ்கர் குமரேசு ஆர்த்தி அர்த்தனா உதவிய நண்பர்கள் எல்லோருமே பொறுப்புணர்ந்து ஈடுபாட்டோடு செயற்பாட்டார்கள். அவர்கள் அனைவரும் கவனிக்கப்படவேண்டியவர்களே.

தற்போது எமது கலைஞர்களால் ஈழத் தமிழர் திரைப்பட சங்கம் (LIFT) உருவாக்கப்பட்டுள்ளது. படிப்படியாக அதன் பரிநாம வளர்ச்சியைக் காண எனக்கும் ஆவலாக உள்ளது.

**ஒரு கலைஞன் என்பவன் தான் சார்ந்த சமூகத்தின்மீது பொறுப்புள்ளவனாக இருக்கவேண்டும் என்ற உண்மை நிலையில். தற்போதுள்ள, வரும் கலைப்படைப்பளிகளுக்க்கு என்ன கூறவிரும்புகின்றீர்கள் ?**

இதற்கு தேசியத்தலைவரின் சிந்தனை ஒன்றை பதிவு செய்ய விரும்புகின்றேன். கலை இலக்கியப் படைப்புக்கள் மக்களைச் சிந்திக்கத் தூண்டவேண்டும். பழமையிலும் பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைபட்டுக் கிடக்கும் மக்களது மனதில் புரட்சிகரப் பார்வையைத் தோற்றுவிக்க வேண்டும் மாறிவரும் சமூக விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

**ஒரு இரசிகனாக இருந்து ஈழத்து சினிமாக்கலையை எவ்வாறு பாக்கின்றீர்கள்? ஈழத்து சினிமா தரும் படைப்புக்கள் உங்களை திருப்திபடுத்துகின்றதா ?தவறின் எவ்வாறான படைப்புகைக்களை எதிர்பார்கின்றீர்கள் ?**

கண்டிப்பாக குறைகளைத் தாண்டிய நிறைகளே முன்னோற்கி நிற்கிறது. காலப்போக்கில் நிறைகளே நிறைவு பெற வேண்டுமென்பதே என்னுடைய அவா. தாயகத்திலும் சரி புலத்திலும் சரி தற்போது வரும் குறும்படங்கள் என் ஆவலின் மேல் நம்பிக்கையை சேர்க்கிறது.

**முகடு இதழின்ஊடாக ஈழத்து சினிமாஇரசிகர்களுக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள் .உங்கள் எதிர்கால படைப்புக்கள் எவ்வாறாக**

இரசிகரை திருப்திப்படுத்தப்போகின்றது?

முதலில் முகடு இதழ் குழுமத்திற்கு நன்றி. இதுபோன்ற ஈழக்கலைஞர்களை அறிமுகப்படுத்தி மக்கள் மத்தியில் அடையாளப்படுத்தி ஊக்குவிப்பது மகிழ்வைத் தருகிறது. ரசிகர்கள் இல்லாமல் கலைத்துறை வளர்வதென்பதற்கு சாத்தியமேயில்லை. அதன் பொறுப்புணர்ந்து ரசிகர்கள் எங்கள் கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டுகிறோம். எங்கள் படைப்பாளிகளின் திரைப்படங்கள் காண்பிக்கப்படும் பொழுது சென்று பார்க்கவேண்டும். நிச்சயமாக எதிர் காலத்தில் எம்மினத்திற்கான நிறைவான படைப்பை எமது கலைஞர்கள் தருவார்கள். எனது எதிர்கால படைப்புகள் ரசிகர்களின் உணர்வுகளில் ஒன்றாகவே பிரதிபலிக்கும். நன்றி

**பெர்லின் சர்வதேசத் திரைப்பட விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட திரைப்படங்களுக்கு அளிக்கப்படும் விருதின் பெயர் "தங்கக் கரடி"**

# அரசியல் அந்தரங்கம்

**புங்கையூர் பூவதி**
**சுவிஸ்**

முகங்கள் ஆயிரம்
முக மூடிகள் ஓராயிரம்
எல்லோருமே வெள்ளை வேட்டி
கள்ளர்கள்

தோளில் துண்டு போட்ட
துரோகிகள்
பதவிக்காய் பாய் போடும்
பரதேசிகள்

வெளிநாட்டில் கையேந்தும்
உள்நாட்டு பணக்காரர்கள்
ஆயிரம் சின்னங்கள்
சிந்தனைகள் எதுவுமில்லை

ஏழைகளை ஏறிமிதிக்கும்
எருமை மாடுகள்
கல்வி கற்க
கற்பை கடன் கேட்கும் படித்தவர்கள்

கன்னிப் பெண்களை கண்களால்
கற்பழிக்கும் காமவெறியர்கள்

தாகத்திற்கு தண்ணீர் தரா
தறுதலைகள்
ஏழைகளிடம் சுரண்டி
கோயில் உண்டியல்களை நிரப்பும்
பேராசைக்காரர்கள்

தன்னலம் காக்க
வன்முறையை தூண்டி விடும்
சுயநலவாதிகள்

நல்லவர்களை புதைத்து
தீயவர்களை தண்ணீர் ஊற்றி வளர்க்கும்
குள்ள நரிகள்

தன் சிரிப்பிற்காய்
பலர் கண்ணீரை பருகும்
பச்சோந்திகள்

யாருக்கும் இதயம் இல்லை
இதயம் உள்ளவர்கள்
இங்கே வாழ்வதில்லை

எல்லாமே பொய்
எதுவுமே உண்மை இல்லை
உலகம் இருந்து என்ன பயன் ??????
அழிந்து போகட்டும்,,
குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்

.

**திரைப்படச்**
**சுவரொட்டியைத்**
**தின்ற கழுதை**
**கொழுத்தது.**
**பார்த்த கழுதை**
**புழுத்தது.**

காசி ஆனந்தன்

# தமிழ்க் கடைத் தம்பி

ப.பார்த்தீபன்

பாரிஸ் நகரம் காலை நேரம் என்றாலே ஒரே பரபரப்பாகத்தான் இருக்கும் மழைகாலத்து ஈசல்களில் படை எடுப்புப்போல் வேலைக்குசெல்லும் மக்கள் வெள்ளம் அலைமோதும்.அதன் ஆர்ப்பரிப்பில் அடங்கிக்கிடக்கும் கிராமங்ளின் கதைகள் ஏராலம். ஏதோ நகரத்தில் தான் எல்லா வளங்களும் கொட்டிக்கிடக்கின்றது என்பது ,இளம் தலைமுறையின் ஏகோபித்த எண்ண ஓட்டம் ஆனால் ,இங்கு மூச்சுவங்கும் காற்றைத்தவிர யாவும் மாத பஜ்ஜட்டில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணிகள் என்றுதான் சொல்ல வேண்டும்.அக்காற்றுகூட நாம் கண்டுபிடித்த விஞ்ஞான கழிவுகளின் செறிவால் நாளாந்தம் அசுத்தமாகிக்கொண்டே ,வருக்கின்றது.இன்னிலையில் முதலாளி வர்கத்தின் முதுகெலும்பாகி உழைப்பின் ஊதியத்தை தவிர முதலாளிகளால் எந்தவித மேலதிகக் கொடுப்பனவும் அற்ற பொருளாதார வாழ்கைமுறை. மனிதர்களை அழுத்திக்கொண்டே இருக்கின்றது. உண்மையில் இயந்திரத்திற்கு கூட உழைப்பின் வேகத்திற்கேற்ப ஒய்வு இருக்கென்றுதான் கூறவேண்டும் நகர வாழ்வில் ஒய்வு மனிதனுக்கு சற்று அப்பாற்பட்ட விடையம். அதன் நியதி வளர்சியடைந்த வல்லரசு நாட்டின் தலை நகரில் ,இருப்பதில் மாற்றுக்கருத்து ஒன்றும் ,இல்லை. அதன் தாக்கம் ,இமையனை ஆட்க்கொண்டதில் தவரொன்றும் ,இல்லை என்றுதான் கூறவேண்டும்.

இமையனிடம் புகையிர நிலையத்தை விட்டு வெளியேறுவதற்குறிய டிக்கட்டும் இல்லை ஆதனால் டிக்கட் அடித்துப்போகும் ஒருவருக்குப்பின்னால் முண்டி அடித்துக்கொண்டு ஒருமாதிரியாக புகையிரத நிலையத்தைவிட்டு வெளிறிவிட்டான். அந்தக் காலைப் பொழுதின் நெரிசலில் டிக்கட் இல்லாமல் புகையிரத நிலையத்தைக் கடப்பது ஒரு அசூர காரியம். அதிலும் டிக்கட் பரிசோதகர் சில வேளைகளில் சாதாரன உடையில் நிப்பார்கள் அகப்பட்டால் மாதம் முழுவதும் டிக்கட்டில்லாமல் பாய்ந்து சேர்த்தபணம் ஒரேதடவையில் குற்றப் பணமாக போய்விடும். அதிலும் மாதத்தொடக்கத்திலும் மாத முடிவிலும் பரிசோதகர் கெடுபிடி ஈழப் போராட்டகாலத்தில் இலங்கை இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ரவுண்டப்பில் பாஸ் பரிசேதனைபோன்று சற்று கடுமையாகவே இருக்கும அதனால் கண்ணுக்குள் எண்ணை ஊற்றிக்கொண்டுதான் தினமும் போய்வரவேண்டும். கடும் அசதியானாலும் இரயில் பொட்டிகளில் கண்களைமூடி அசந்து தூங்குவதை தவிர்த்து களவுபயத்தில் ஊரைக்காக்கும் கிராம விழிப்புக்குழுக்கள்போன்று மிக அவதானமாக இருக்க வேண்டும். என்னசெய்வது ஊரில் இருந்து இங்கு வந்த பின்தான்,பணத்தின்மீது ஓர் ,இனம்புரியாத அக்கறை பணத்தை சேர்க்கவேண்டும் எதிர்காலத்தை வளமுமுள்ளதாக மாற்றவேண்டும் என்ற ஆசை உள்ளுக்குள் ஓடிக்கொண்டு இருக்கும். அதனால் கால நேரம்பாராது கடும் உளைப்பு உடலின் உண்மைதன்மையை நிலைகுலையச்செய்யும். அதன் வலிக்கேற்ப, வரும் பணத்தின் மீது மிகமிகக் கவனமாக இருக்கவேண்டியது கட்டாயமாகிவிட்டுகிறது. பணத்தின் வரவுக்காக வாழ்கை முறை, முடிக்கப்படாத கோடுகள் நிறைந்த ஓவியங்கள்போல் இங்கு அர்தமற்று போய்விட்டது. பணத்தின் வரவுக்காக மனித வாழ்வின் அழிவை யாரும் புரிவதுமில்லை உணர்வதும் இல்லை. பணத்திற்காக சிலநேரங்களில் சட்டங்களை மீறவும் மனம் தூண்டுகின்றது தவறின் பிறறிடம் கையேந்தும் நிலைதான் வரும். இமையனும் எப்படியாவது செலவைச் சிக்கனப்படுத்தி காசைச் சேமித்தால் தான்,தான் வந்தகடன்,வந்தகடன்மீதான வட்டி,செலவுக்கு வீட்டுக்கு அனுப்புதல்.அதுபோக அக்கா தங்கையின் திருமணம், தம்பிக்கு செலவுக்குக் காசு என்று, தனி ஒருவனாய் குடும்ப எதிர்பார்ப்பை ஈடு செய்ய முடியும்.

தமிழர் கலாச்சாரத்தில் ஆழமாக கட்டமைக்கப்பட குடும்ப உறவுகளின் நெருக்கத்தின் ஒழுங்கு மேற்க்தேய தேசத்தோடு ஒப்பிட்டு பார்க்கும்போது முற்றிலும் மாறுபட்டதாகவே தெரியும் ஆனாலும் எங்கள் குடும்பஅமைப்பின் உரிமை எடுக்கும் உண்மைத்தன்மை மனித உறவுகளை நெருக்கப்படுத்தும். அதற்காக கடுமையாக உழைப்பதையும் தாண்டி மகிழ்வான விடயங்கள் மனதை அமைதிப்படுத்தும். இமையன் சிலநேரங்களில் பணத்தை சேமிக்க அரச சட்டங்களின் மென்போக்கை தனக்குச்சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது வழமை அது தவறின் உறுத்தலாக அவனுக்கு தெரிவதும் இல்லை அதில் வெற்றி கிடைத்து விட்டால் இமையன் தன் நண்பர்களுக்கு பெருமை பேசத் தவறியதும் இல்லை,,இது போன்ற நிகழ்வின் வெற்றி பீத்தல் எல்லா மனித ஆழ்மனங்களிலும் படிந்துகிடக்கும் எழுதப்படாத ஓர் விதி

இமையன் புகையிரதநிலையத்தை விட்டு வெளியேறிக்கொண்டு இருக்கும்போதே அவன் கைபேசி அலறியது "தம்பி எங்கடாப்பா நிக்குறாய்" என்ற கடை முதலாலியின் குரலில் பதட்டமும் அவசரமும் தென்பட்டது இமையன் அதே வேகத்தில் "இன்னும் இரண்டு நிமிடத்தில் கடைக்கு முன்னால நிற்பன் அண்ணா

என்றான்"அதற்கிடையில் முதலாளி பதட்டத்துடன் "கொஞ்சம் பொறடாப்பா இப்ப கடைக்கு வந்திடாத முன்சாப்பாட்டு கடைக்குள்ள விசாக் கொண்ரோல் பாஞ்சுட்டுதாம் " என்ற அவசரத்திலேயே கைபேசியை துண்டித்தான் ,இமயனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை சரி கடைக்கு சாமன் வாங்குறமாதிரி போய் என்ன நடக்குதென்று பார்ப்பம் எனக் கடையை நோக்கி நடந்தான். காலைநேரம் வீதி சற்று அமைதியாகவே இருந்தது. அந்த அமைதியில் தன் நிலையின் தனிமையை எண்ணி எரிமலையாய் மனம் குமுறி வாய்குள் என்ன வாழ்கையடா சனியன் ,து என்று வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டே தன் நடையை தொடர்ந்தான் .


இமையன் இங்கு வந்து கொஞ்சக்காலம் என்றதால். ஒப்ரா(ofrra என்பது பிரான்ஸில் முதல் முறை அகதி கோரப்படும் அரசசார்பற்ற மனித உரிமை அமைப்பு) நிராகரித்து அதன் பதில்மீது கொமிசனில் மேல்முறையீடு செய்து அவர்களின் அழைப்புக்காய் காத்திருந்தான். அதனால் அவன் சட்டப்படி வேலை செய்வதற்கான அனுமதி இல்லை அரசாங்கம் உதவியாகக் கொடுக்கின்ற மாதக்கொடை முன்நூற்றி முப்பதும் வாழ்கைத்தேவைக்கு போதாது அதனால் களவாக வேலைசெய்து ஆகவேண்டும் என்ற கட்டாயம்.விசா உள்ளவர்களுக்கே இங்கு எங்கு தேடியும் ஓர் ஒழுங்கான வேலை கிடைப்பதில்லை.காரணம் ஒன்று மொழிப்பிரச்சனை அடுத்தது அவர்கள் வேலைதேடும் தன்மை அவர்களை சூழவுள்ள நட்பு வட்டத்துக்குள்லேயே இருக்கும். இமயனும் பலவேலைகளுக்கு தன்னைப்போன்ற முகசாயலுடைய விசாக்களை எடுத்துக்கொண்டு முயற்சிசெய்தான் ஆனாலும் பலனளிக்கவில்லை காரணம் இப்பொழுது வெள்ளைகளும் எமது சமுக அடயாளங்களை உடனமே அடையாளம் கண்டுவிடுவார்கள் அந்தளவுக்கு ஈழத்தமிழ் அகதிகளின் புளக்கம் பாரிஸ்நகா வீதிகளை அலங்கரிக்கின்றது என்றுதான் கூறவேண்டும். அவ்வாறு ஏதாவது சுத்து மாத்து பண்ணி சாயலுடைய விசாக்கொடுத்து பதிந்தாலும் பிறிதொறு பிரச்சனை மாதம் மாதம் சூழ்ந்துவிடும் அதாவது வரும் சம்பளச் செக்க வாங்கிகொண்டு வந்து விசாக்காரனிடம் கொடுத்தால் அவன் சம்பளத்த குரங்கு அப்பக்கதை போன்று பிய்த்து பிய்த்து கொடுப்பான். காரணம் கேட்கமுடியாது பலவீனப்பட்டவனின் முதுகில் ஏறிப்பயணிப்பது அவர்களுக்கு மிகச்சுலபம்போலும். அதனால் இமயன் வேறு விசாகொடுத்து பதிந்து வேலை செய்வதை முடிந்தளவு தவிர்க்கவே விரும்பினான்.தன்உண்மையை சொல்லி வேலை செய்யவே விரும்பினான்.அவ்வாறே தமிழ்கடை ஒன்றில் உண்மையை சொல்லி கையில் காசு வேண்டிகொண்டு வேலை செய்தான் ஆனாலும் கடை முதலாளி பதிவதற்கு ஒரு விசாவை தா என்று கேட்டிருந்தார் இமையனும் வாரம் ஒரு முறை எங்காவது தன் முகச்சாயல் விசாவை தேடிக்கொண்டுபோய் தமிழ்கடை முதலாளியிடம் கொடுப்பான் அவரும் தமிழ்தான் உடன் விசாவப்பாத்துட்டு ஏதோ கலியானத்துக்கு பொண்ணு பாக்குமாப்போல் இதுல மூக்கு உன்னைப்போல இல்ல கண் சின்னனா இருக்கு காது பெருசா இருக்கு என சாட்டுச்சொல்லி மறுத்து விடுவார்.

உண்மைதான் எங்கடையாக்கள் எங்கள அடையாளம் காணுறது சுலபம் தானே. அது ஒரு புறம் இருக்க முதலாளிக்கு பதிந்து வேலை செய்ய விருப்பமும் இல்லை பதிந்து வேலைசெய்வித்தால் அரசங்கத்திற்கு வரி செலுத்த வேண்டும். அரசுக்கு வரி செலுத்தி நேர்மையாக காசு உழைக்க எந்த முதலாளிதான் விரும்புவான் தன் ஒருசான் வயிற்றுக்கு உலக பொளாதாரத்தை கொடுத்தாலும் ஆசைப்படும் தன்மைதானே முதலாளி வர்க்கம் இதற்கு எம்மவரும் என்ன விதிவிலக்கா. ?

இமயன் தன் மனம் சோர்ந்த படியே வீதியால் நடந்து போய்கொண்டு இருந்தான் அந்தநேரம்பார்த்து சற்று தூரத்தில் இருந்து ஒரு குரல் உரிமையோடு இமையன்.... இமையன்.... என கூப்பிட்டது இமயன் மனச்சோர்வையுடைத்து தன்பெயரை இனங்கண்டு உணர்ந்து திரும்புவதற்குள் அந்தக்குரல் இமயன் தோள் பட்டையை இழுத்து மச்சான் நீ இன்னும் உயிரோடு இருக்குறியா ? தம்பிவருவான்.........

**சனவரி 7:**
**1841 - உதயதாரகை பத்திரிகை தமிழ், ஆங்கில இருமொழிப் பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த முதலாவது பத்திரிகை இதுவாகும்.**

**சனவரி 8-1782 - திருகோணமலை கோட்டையை பிரித்தானியர் கைப்பற்றினர்**



**சனவரி 10-1974 - யாழ்ப்பாணத்தில் 4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வில் 11 பொதுமக்கள் இலங்கை காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டனர்**

**சனவரி 16-2008 - 2002 போர்நிறுத்த உடன்படிக்கையில் இருந்து இலங்கை அரசு அதிகாரபூர்வமாக விலகியது.**

# விடுதலை

நெடுமாறன்.

கதை நீண்டு போகின்றது
காலம் ஏமாற்றியதால்
ஞாலத்தில் மாற்றம் வருமென்று
தானே நம்பியிருந்தோம்
நடக்கவில்லை ஏனோ...?

வெள்ளையன் போகும்போது பிரித்து தருவதாய் கேட்டான்
வேண்டாமென்று
பெருந்தன்மையுடன் சொன்னாரகள்
எம் பெரியோர்கள்
அன்று விழுந்ததே இந்த பேரிடி

நிலத்தை அபகரித்து
தரப்படுத்தலை அறிமுகப்படுத்தி
தாய் மொழியை புறக்கணித்து
இன்னும் எத்தனை அடக்குமுறை
இடுப்பின் உறையினுள் வாள்
தாங்கிய வீரவழி வந்தவர்கள்
என்றாலும்
அறவழி நின்று அஹிம்சையில் போராடி காந்தியத்தை
பேசினோம் கடைசிவரை
இனிவேறு வழியில்லை என்றே
தனிவழி செல்லத் துணிந்தோம்..

பேச்சு மேசையில் பெற்றுவிடலாம்
என்ற பேராசையில் இருந்தவரகள்
பேரம்பேசி சோரம் போனார்கள்
இது வரலாற்றுத் தவறு
வன்னியன் பரம்பரையில் அன்று
தங்கத் தாம்பாளத்தில்
வைத்துத்தர தயாரில்லை பெரும்பான்மை
தந்தை செல்வா உணர்ந்தாரே
அதுவே வட்டுக்கோட்டைத் தீர்மானமாய் துளிர் விட்டது...

களத்தை திணித்தது காலம்
கரிகாலன் வழி பயணிக்க
கதவை திறந்தது
அதிகார வர்க்கத்தின் அட்டூழியம்
நேற்றுவரை நெஞ்சை
நிமிர்த்தியே வாழ்ந்தோம்
வான், கடல், தரையென
கட்டி ஆண்டம் தானே ஆனால்
வஞ்சகம், சூழ்ச்சியால்
வலி தோய்ந்த வாழ்வை
மீண்டும் சந்தித்தோம் நாம் இன்று..


எம்தேச விடுதலையை
விலை பேசினார்கள் உலகப்
பெருந்தலைவர்கள்
பறைசாற்றினார்கள் பயங்கரவாதமாய்
எம் ஆயுதங்கள் மௌனிக்கும்வரை..
இலட்சியத்தில் உறுதி
விடுதலையில் தெளிவாய் இருந்ததால்
பல இலட்சம் உயிரை
பறிகொடுத்தோம் முள்ளிவாய்க்காலில்
பகை வென்றதாய் பட்டாசு
முட்கம்பி வேலிகளுக்குள்
மீண்டும் முடங்கிய எம் வாழ்வு
கஞ்சிக்கு கையேந்தும்
நிர்க்கதியற்றவரகளாய் நாம்
நிராயுதபாணியாக நின்றாலும்
எம்மீது ஒரு நிழல் யுத்தமொன்று
இன்னும் தொடர்கின்றதே..

நீதி கேட்கின்றோம்
நிம்மதியாய் வாழ அதற்கும்
வகையற்றவர்களாய்
வன்முறைகள் மீண்டும் மீண்டும்
வெந்து துடித்தபோது
வேடிக்கை பார்த்த வேதாளங்கள்
முருங்கை மரத்தில் மீண்டும்
ஏதோ எமக்கு
வேண்டி தருவதாய்
கடைசிவரை யாரும் வாங்கித்தர மாட்டார்கள
கால் கிலோ கூட
நாங்கள் கேட்டதில்...

இன்னும் ஏமாற்றப்படுவோம்
இதுதான் நடக்கும் இனியும்
அப்போதுதான் எல்லோரும்
தேடுவீர்கள் விடுதலையை
காலம் விட்ட வழியில் மீண்டும்
களத்தினில் இன்னுமொரு
கரிகாலன் தலைமையினிலே
எமது விடுதலை சாத்தியமாகும்..

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
தர்மம் மறுபடியும் வெல்லும்..

## நஞ்சுண்ட காடு




நடந்து முடிந்த பாரிய தமிழ் இன அழிப்புக்கு பின்னர் ஈழத்தில் இருந்து இலக்கிய படைப்புக்கள் புதிய உத்வேகத்துடன் துளிர் விட தொடங்கியுள்ளது அதுவும் போராட்ட வாழ்கை பற்றிய பதிவுகள் மிகவும் சிறப்பாக பதியப்பட்டிருக்கின்றன அந்தவரிசையில் இன்று “குணா கவியழகனின்” “**நஞ்சுண்டகாடு**”ம் சேர்ந்திருக்கிறது.

ஆனால் இந்த பிரதி 2004ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் “ஏணைப்பிறை” என்ற பெயரில் வன்னி மண்ணில் வெளியிடப்பட்டிருக்கிறது. மீண்டும் இப்போது நஞ்சுண்ட காடு எனும் பெயரில் மறுபதிப்பாக வெளி வந்திருக்கிறது. இந்த நூலுக்கான முன்னுரையை **வே.பாலகுமாரன்** 2006ம் ஆண்டு எழுதியிருக்கிறார் என்பதனால் மேலும் இந்த நூலுக்கன மதிப்பை கூட்டுகிறது.

ஆரம்பம் தொட்டு முடிவு வரை மிகுந்த எதிர்பார்ப்புடன் அடுத்து என்ன என்ற ஏக்கத்துடன் இதன் ஒவ்வொரு பகுதியும் நகர்த்தப்பட்டிருக்கின்றது வாழ்வினில் அனுபவிக்க முடியாத புதிரான கணங்கள், வர்ணிக்க முடியாத பொழுதுகள், அறிமுகமற்ற புதிய நட்புக்கள், நண்பர்களின் குடும்பங்கள், அவர்களின் வாழ்கையில்பிடித்திருக்கும்ஏழ்மைஎனும்கொடியநோய், ஒரு போராளியாக மாறுவதர்க்கான ஆரம்ப நிலை பயிற்சிகள், பயிற்சி ஆசிரியர்கள், களங்கள் என்று சொல்லி கதையின் ஒவ்வொரு பகுதியும் மிகவும் அற்புதமாக வடிக்கபட்டிருக்கிறது.


இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் கதா பாத்திரங்கள் ஒவ்வொன்றும் வாசிக்கும் போது மிகவும் மனதை வருடி நிற்கிறது இந்த பரிதவிப்பில் இருந்து மீண்டுகொள்ள. சில நாட்களாகும் எத்தனை வலிகள், வேதனைகள், எத்தனை அற்புதமான தியாகங்கள், எத்தனை எத்தனை தற்கொடைகள், நாம் கொடுத்த விலை என்பது எவராலும் கணிக்க முடியாத ஒன்று ஏன இனி ஒரு பொழுதும் எவராலும் கொடுக்க முடியாத ஒன்று.

பொறுப்பற்ற குடும்ப தலைவனை கொண்ட வறுமையின் பிடியில் போராட்டத்தையும், தியாகத்தையும் வாழ்க்கையாக கொண்ட ஒரு குடும்பம் தனது வருமானத்திற்க்காக குடும்பத்தில் மூத்த ஆண்பிள்ளையை நம்பியிருக்கிறது. ஒரு நேர உணவுக்கே அல்லல் படும் நேரத்தில் அந்த வீட்டில் இருக்கும் வயது வந்த பெண்பிள்ளையின் நகை போடும் ஆசையில் ஊரில் இருப்பவரின் வதந்தியை நம்பி ஐந்து ரூபா குத்தி காசை சேர்த்து கொண்டு நகை செய்யும் ஆசையுடன் நகைகடை போனாள் நகை கடைக்காரனே ஏளனமாக சிரித்து அவமானப்படுத்தும் அக்காவின் நிலமை என்பது எந்த ஒரு ஆண் சகோதரத்துக்கு வரக்கூடாத நிலைமை. மனதை போட்டு குடையும் நிகழ்ச்சியாக நாங்கள் பிரிந்து வந்த பெண் சகோதரங்களை கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது.

மானத்தை காக்க அந்த பிள்ளைக்கான ஆசையை நிறைவேற்ற எவ்வளவு கடினம் என்பதை பதிவு செய்திருக்கிறார். பெண்பிள்ளைக்கு ஒரு சட்டையை வாங்குவதற்குப்படும் கஸ்டமும், ஒருநேர உணவுக்காகவும், இறந்த தாயை அடக்கம் செய்யவசதியற்ற அக்கா ஒரு சவப்பெட்டிக்காகவும் அவர் அலைந்து திரிவதும் மனதை பிழிந்தெடுக்கும் வேதனையான காட்சிகள். அம்மா செத்ததை விட அம்மாவை எப்படி அடக்கம் செய்ய முடியும் என்று தான் அழுதன் என்ற அக்காவின் புலம்பல் எந்த ஒரு பிள்ளைக்கும் ஏற்பட கூடாது. தாய் இறந்த சிறிது காலத்திலேயே தந்தையும் இறந்துவிடவே அழுவதற்கு சக்தியற்ற அக்கா தனது முழு பலத்தையும் பிரயோகித்து அழுதார் அதுவும் ஒரு நேரச்சாப்பாட்டுக்கு உலை ஏற்றவே வக்கில்லாத அந்த குடும்பம் அப்பாவின் இறுதி அடக்கத்திற்க்கு இந்த தடவை யாரிடம் சவப்பெட்டி கேட்பது என்று! இந்தத் தடவையும் அம்மாவுக்கு உதவி புரிந்த மாதிரி திருகோணமலை பொறுப்பாளரும் உறுப்பினரும் அப்பாவுக்கு உதவ முன் வந்தனர்

போராளியாக இருக்கும் அண்ணன் தாய் சாவுக்கும் இல்லை தந்தை சாவுக்கும் இல்லை பொறுப்பாளரிடம் கேட்கும் போதெல்லாம் முக்கியமான வேலையாக இருக்கிறார் வருவார் என்று சொல்லியே காலம் கடந்து சென்றது இறுதியில் செய்தி வருகிறது கரும்புலியாக மரணித்து விட்டார் என்று அந்தக் குடும்பத்தில் ஒருவர் மாவீரராகும்போது அக்குடும்பத்தின் வலியை இவ்வாறு எழுதியிருக்கிறார் குணா கவியழகன். “அழுவதற்கு சக்தியற்றிருந்த அக்காவும் அந்தக் குடும்பமும், அந்தக் குடிலும் தன் வல்லமையெல்லாம் திரட்டி அழுதது” மொத்தத்தில் நஞ்சுண்ட காடு சிறுகதை ஈழத்து தமிழனின் போராட்ட வாழ்வின் கண் முன்னே கொண்டுவந்த ஆவண பதிவே.

# வன்னி -வரலாறும் பண்பாடும்




இலங்கைத் தீவில் வாழும் தமிழினத்திற்கு மிகத் தொன்மையான வரலாறு உண்டு. இந்த வரலாறு சிங்கள இனத்தின் வரலாற்றை விட பழமையானது.

ஆனால் துரதிஷ்ட்ட வசமாக சிங்கள இனம் தனது வரலாற்றை பேணி பாதுகாத்து வந்த அளவுக்கு தமிழினம் அதைப் பேணி பாதுகாக்கவில்லை. தமிழ் சமூகத்தின் பிரிக்கமுடியாத அங்கமாக இன்னமும் ஒட்டிக்கொண்டிருக்கும் அடிப்படைவாத மற்றும் பிழைப்புவாத சிந்தனைகள் நமது வரலாற்றை தொலைப்பபுதற்கும் எமது எதிரிகள் அதை திரிப்பதற்கும் காரணமாக அமைந்துவிட்டன. சிங்கள இனம் தனது வரலாற்றின் நீட்சியாக அதன் தொன்மைக்கு சான்றாக அனுராதபுர தொல்லியல் தடயங்களை காட்டுகின்ற போது தமிழர் தரப்பால் கி.பி.13ம் ம் நூற்றாண்டுக்கு பின்னர் தோன்றிய யாழ்ப்பாண ஆரிய சக்கரவர்த்திகளின் வரலாற்றை தவிர வேறெதையும் காட்ட முடிவதில்லை. கி.பி 13ம் நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கைத் தீவில் தமிழர்களுடைய அரசுகள் இருக்கவில்லையா? என்ற கேள்விக்கு தமிழர் தரப்பால் ஆதரார தகவல்களை முன்வைக்க முடியாத சூழ்நிலையே இன்றும் இருக்கிறது. “அனுராதபுரக் காலமும் அனுராதபுர அரசும்“ தமிழர் வரலாற்றின் நீட்சியாக சிங்கள இனத்திற்கு கைமாறியது என்பதும் அனுராதபுர பேரரசுக்கு புறம்பாக இலங்கைத்தீவில் வேறு அரசுகளும் இருந்தன என்பதும் அப்பட்டமான உண்மை. இந்த உண்மையை வெளிக் கொண்டு வருவதற்கு தடையாக இருப்பது பௌத்த சிங்கள பேரினவாதிகள் மட்டுமல்ல சைவ தமிழ் அடிப்படைவாதிகளுமேயாகும். தமிழர்களுடைய வரலாற்றை வைதீக சைவ மதத்துக்குள் அடக்க முற்படுகிற போது தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்ட மகாயான பௌத்தத்தின் வரலாறும் அதை கடைபிடித்த தமிழ் அரசுகளின் வரலாறும் மூடி மறைக்கப்படுகிறது. உதாரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த கதிர மலை(கந்தரோடை) அரசு மாகாயான பௌத்தத்தை கடைப்பிடித்த தமிழ் அரசு. அந்த அரசு பற்றிய தகல்களை மூடிமறைப்பதில் சிங்களத்தரப்பு மட்டுமல்ல தமிழர் தரப்பும் முன்னணியில் இருந்தது. அதேபோல வன்னிப் பெருநிலப் பரப்பென்பது இலங்கை தமிழர்களுடைய வரலாற்று தொன்மைக்கு சான்று பகிர்கின்ற பொக்கிச பூமி.ஆனால் அது நாகரீக வளர்ச்சியடையாத மக்கள் வாழுகின்ற காட்டுப்பிரதேசம் அங்கே சொல்லிக் கொள்வதற்கு என்று எதுவுமே இல்லை என்ற அலட்சியப் போக்கே மிக நீண்ட காலமாக தமிழ் அதிகாரவர்க்க சிந்தனையாளர்களிடம் இருந்து. ஆனால் 1980 களின் பின் வன்னியில் இருந்து வெளிப்பட்ட தொல்லியல் தடையங்கள் பௌத்த சிங்கள பேரினவாதிகளாலும் சைவத்தமிழ் அடிப்படைவாதிகளாலும் மூடி வைக்கப்பட்ட தொல் தமிழரின் வரலாற்றை வெளிச்சத்துக்கு கொண்டுவந்தன. வன்னி என்பது வெறும் காடல்ல.அது தொல் தமிழ் குடியிருப்புகளும் அரசுகளும் நாகரீங்களும் இருந்த பகுதி என்ற உண்மை வெளிப்பட்டது.இதை அடுத்து அங்கு முறையான தொல்லியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற உணர்வு அனைத்து அடிப்படைவாதம் மற்றும் பேரினவாத சிந்தனைகளை தாண்டி சிந்திக்கும் ஆய்வாளர்களிடையே ஏற்பட்டது.இதன் அறுவடையாக வன்னியின் வரலாறும் பண்பாடும் பற்றிய பல அரிய தகவல்கள் வெளிக்கொண்டுவரப்பட்டன. தற்போது வன்னியின் வரலாறும் பண்பாடும் என்றதலைப்பில் அரிய நூல் ஒன்று நோர்வேயில் வதியும் “**கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்** என்பவரால் தொகுக்கப்பட்டுள்ளது. பல்வேறு வரலாற்று பேராசிரியர்கள் வரலாற்று ஆர்வலர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக இந்த நூல் வெளிவந்திருக்கிறது.இலங்கைத் தமிழர்களின் வரலாற்று தொன்மையை ஆவணப்படுத்துகின்ற ஆதாரபூர்வமாக நிறுவுகின்ற பயணத்தில் இந்த நூல் ஒரு படிக்கட்டாக இருக்கும் என்பதில் ஐயம் எதுவுல்லை.

**இந்து சமயம் இந்தியாவில் தோன்றிய, காலத்தால் மிகவும் ஆதியான உலகின் முக்கிய சமயங்களில் ஒன்று. ஏறக்குறைய 850 மில்லியன் இந்துக்களைக் கொண்டு உலகின் மூன்றாவது பெரிய சமயமாக இருக்கின்றது பெரும்பாலன இந்துக்கள் இந்தியாவிலேயே வசிக்கின்றார்கள். நேபாளம், இலங்கை, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், சுரினாம், ஃபிஜி தீவுகள், அமெரிக்கா, கனடா மற்றும் பல நாடுகளிலும் இந்துக்கள் குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையில் வசிக்கின்றார்கள். பிற சமயங்கள் போலன்றி இந்து சமயத்தை தோற்றுவித்தவர் என்று யாருமில்லை. இதனைக் நெறிப்படுத்த அல்லது கட்டுப்படுத்த என ஒரு மைய அமைப்பு இல்லை. பல்வேறு வகையில் பரவலான நம்பிக்கைகள், சடங்குகள், சமய நூல்கள் என்பவற்றைக் உள்வாங்கி உருவான ஒரு சமயமே இந்து சமயம்.**

**தலைமையற்ற வெளி .தமிழ் இளைஞர் நிலை**
**கேள்வி- ப.பார்தீபன் பதில் -நிலாந்தன்**

**புரை ஓடிபோன சிங்கள இனவாதத்தின் ஆதாரசக்தியாக விளங்கும் மாகாவம்சத்திற்கும். அதே தன்மையோடு எம்மை அடக்கி ஒடுக்கும் பிராமணர்களால் புனையப்பட்ட புராண இதிகாசங்களுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லாதபோதும்.புராணங்களும் இதிகாசங்களும் மதம் சார்ந்து எம்மவர்களால் வெளிப்படையாக எந்த ஆய்வும் அற்று கடவுளின் பெயரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. நாங்கள் இன் நிலையில் இருந்து தமிழ்தேசியத்தை கட்டி எழுப்புவதில் வரலாற்றை சரியான முறையில், சரியானதைப் போதிப்பதில் (பாடசாலை கல்விதிட்டம்உட்பட) தவறவிட்டு விட்டோம்.அதன் நீட்சி இன்று எம் இனம் எதிர் நோக்கிக்கொண்டிருக்கும் பாரிய கலாச்சார,மொழி,அரசியல், பொருளாதார பின்னடைவுகள். இதன் தொடர்சியில் எமக்கு நிலையான அரசியலிருப்பு இல்லை என்பதற்கு அப்பால் தமிழ்தேசியத்திற்கான தேவையின் பயணத்திற்கு இன்றைய தமிழ் இளைஞர்களின் எதிர்காலப் பங்களிப்பு எவ்வாறு இருக்க வேண்டுமென எண்ணுகின்றீர்கள்? அவர்களின் சமகால நடைமுறைச் செயற்பாடுகள் தமிழ் தேசியப்பயணத்திற்கு துணையாகவிருக்குமா?தவரின் அவர்களிடம் இருந்து எவ்வாறான செயல்வீச்சை எதிர்பார்க்கின்றீர்கள்.?**

உங்களுடைய கேள்வி பிரதானமாக இரண்டு குவிமையங்களை கொண்டது. முதலாவது தேசிய கருத்துருவாக்கம் பற்றியது. இரண்டாவது இளைஞர்களின் பங்களிப்புப் பற்றியது. முதலில் தேசியக் கருத்துருவாக்கத்தைப் பார்க்கலாம். நாங்கள் தேசியம் என்று எதை விளங்கிவைத்திருக்கின்றோம் என்பது இங்கு முக்கியம். தமிழ்த் தேசியத்தின் அடித்தளமாகக் காணப்படுவது இனமான அரசியல்தான். ஆனால் தேசியம் எனப்படுவது அதைவிட ஆழமானது. இதுதொடர்பாக மிகக் குறைந்தளவு வாதப்பிரதிவாதங்களே தமிழ்மக்கள் மத்தியில் நடைபெற்றிருக்கின்றன. மிகக் குறைந்தளவு நூல்களே வெளிவந்திருக்கின்றன. மிகக்குறைந்தளவு கட்டுரைகளே எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் தேசியத்தின் பெயரால் இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களைக் கொடுத்தவர்கள் நாங்கள். கோடிக்கணக்கான சொத்துக்களைக் கொடுத்த மக்கள் நாங்கள். நூற்றுக்கணக்கான தடவைகள் இடம்பெயர்ந்த மக்கள் நாங்கள். இப்பொழுதும் எங்கள் மத்தியில் தமது பெயரில் தமிழ்த் தேசியம் என்ற சொல்லை இரண்டு கட்சிகள் வைத்துக் கொண்டுள்ளன. ஆனால் தேசியம் தொடர்பில் ஆழமான அறிவுபூர்வமான உரையாடல்கள் மிகக்குறைந்தளவே நடைபெற்றுள்ளன. எனவே முதலில் நாங்கள் தேசியம் என்றால் என்ன என்பது குறித்து ஒரு தெளிவிற்கு வரவேண்டும். கோட்பாட்டுரீதியான தூய தேசியத்திற்கும் நடைமுறையில் உள்ள பிரயோக தேசியத்திற்கும் இடையிலான வேறுபாடு-களை கற்றுத் தெளிய வேண்டும். இது தொடர்பில் மிகக் கொழுத்த பட்டறிவைப் பெற்ற மக்கள் நாங்கள். எனவே பிரயோக நிலை தேசியத்திற்கும் தூய தேசியத்திற்கும் இடையிலான தூரத்தைக் கடப்பதற்கு அதிகம் பங்களிப்புச் செய்யத்தேவையான பட்டறிவு எங்களுக்குண்டு. எனவே தேசியம் என்றால் என்ன என்பது தொடர்பில் நாங்கள் அறிவு சார்ந்தும் அனுபவம் சார்ந்தும் ஒரு தெளிவிற்கு வரவேண்டும்.



அப்பொழுதே சரியான பொருளில் தேசியக் கருத்துருவாக்கத்தை செய்ய முடியும். ஒரு தேசியக் கல்விக் கொள்கையையும் உருவாக்க முடியும். இது முதலாவது. இரண்டாவது இளைஞர்களின் பங்களிப்புப் பற்றியது. நீங்கள் இளைஞர்கள் என்று கருதுவது தாயகத்தையா அல்லது புலம் பெயர்ந்த சமூகத்தையா என்பது தெரியவில்லை. நான் இங்கு தாயகத்து நிலவரங்களைப் பற்றியே கதைக்க விரும்புகின்றேன். 2009 இற்கு முன்புவரை இள வயதினர் தமது சொந்தக் கனவுகளைத் துறந்து ஒரு பொதுக் கனவை நோக்கி அணிவகுத்துச் சென்ற ஒரு சமூகத்தில் வாழ்ந்தோம். அந்த அனுபவத்துக்கூடாகப் பார்த்தால் 2009 மே இற்குப் பின்னரான நிலமை ஏமாற்றம் அளிப்பதாகவே இருக்கும். ஆனால் இதற்கு இளைஞர்கள் பொறுப்பல்ல. தலைவர்களே பொறுப்பு. இளைஞர்கள் மத்தியில் இலட்சியப் பற்றையும் விழுமியங்களையும் கட்டியெழுப்ப வேண்டியது. தலைவர்களும்-அரசியல் தலைவர்களும், சமூகத்ததலைவர்களும், புத்திஜீவிகள், படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் போன்றவர்கள் தான். ஆனால் கடந்த ஐந்தேமுக்கால் ஆண்டுகாலமாக ஒருவித தலைமைத்துவ வெற்றிடமே நிலவிவருகின்றது. இளைஞர்களின் வேகத்திற்கும் வீச்சிற்கும் ஈடுகொடுக்கத்தக்க நிலையில் தலைவர்கள் ஈழத்தமிழர்கள் மத்தியில் இப்பொழுது இல்லை. இதனால் இளைஞர்களின் சக்தி ஒரு பொதுக் குறிக்கோளை நோக்கி ஒன்றுதிரட்டப்படாது வீணே சிந்தப்படுகின்றது. ஆயுத மோதல்கள் முடிவிற்கு வந்த பின்னரான ஒரு சூழலில் தடையற்ற

போக்குவரத்து, தடையற்ற இணையத் தொடர்பு, தடையற்றி நிதிமூலதனப்படர்ச்சி, ஆயுதமோதல்கள் முடிவிற்கு வந்தபின்னரான ஒருவித அசுவாசச் சூழல், புலம்பெயர் தமிழர்கள் அனுப்பும் காசு போன்ற இன்னோரன்ன காரணங்களின் திரண்ட விளைவாக ஒரு பெரும் நுகர்வுத் தாகம் உண்டாகியிருக்கிறது. இதில் முதற்பலியாவது துடித்துக்கொண்டு முன்வரும் இளையதலைமுறைதான். எனவே தேசியம் தொடர்பான அறிவுபூர்வமான விளக்கத்தோடு மேலெழும் ஒரு தலைமைதான் இளைய தலைமுறையின் வேகத்திற்கும் வீச்சிற்கும் ஈடுகொடுக்கும்.இப்பொழுது தலைமைதான் பிரச்சினை இளைஞர்கள் அல்ல.தலைவர்கள் என்ன செய்ய வேண்டும் என்றே கேளுங்கள்,

# கீபோட் போராளி

சிறுகதை **அஞ்சரன்**

பரணி கபேயை குடித்து முடிக்கும்போது நேரம் எட்டரை காட்டியது வேகமா இன்று வேலை முடிகக்வேணும் என்னும் மனக்கணக்கில் தொடங்கினான் தண்ணியில் சலாட்டை தூக்கி போட்டு விட்டு , தக்காளி பழத்தை எடுத்து எட்டா வெட்ட தொடங்க ,சவா(நலமா) என்று கேட்டபடி செப் உள்ளே வந்தான் . உய்(ஓம் ) என்று சொல்லிக் கொண்டு சலாட்டை வெட்ட தொடங்கினான் பரணி இன்று பின்னேரம் வேளைக்கு போகவேணும் ,அதனால் இப்பவே கூட எல்லாம் செய்து வைத்தால் வேளைக்கு இறங்கலாம் என்னும் எண்ணோட்டத்தில் வேகமா வேலைசெய்ய தொடங்கினான்.. நாலு ,மணிபோல குகன் வருவான் ஆளை ஏரியாவில் சந்தித்து விட்டு போனா இரவு வளைச்சு அடிக்கலாம் ஆளுக்கு இண்டைக்கு எப்படியும் ஆளை தப்ப விடக்கூடாது அவருக்கு சொறிக்கதை ,வேலை முடியும் நேரம் குகன் தொலைபேசியில் மச்சி நான் வந்திட்டன் ஏரியாக்கு நீ எப்ப வருவா? இந்த உடுப்பு மாத்திரன் இப்ப வருவன் நில்லு போயிடாத ' என்று சொல்லிக்கொண்டு சப்பாத்தை கட்டிக்கொண்டு ஜாக்கெட்டை எடுத்து கொளுவினான் ...

வணக்கம் மச்சி எப்படி சுகம் வேளைக்கு வந்திட்ட போல ,ஓம் மச்சான் பரவாயில்லை இந்த அண்ணையும் வாறன் என்று சொன்னார் அதுதான் கொஞ்சம் நேரத்தோட வந்திட்டன் ,ஓ யாரு இவர் புதுசா கிடக்கு ஒருநாளும் காணவில்லை ஆளை ,ம்ம் நீ கண்டிருக்க மாட்ட இப்பத்தான் ஊரில இருத்து வந்தவர் முதல் இயக்கத்தில இருந்து கடைசி சண்டையில காயப்பட்டு ,பிறகு பிடிபட்டு உள்ளுக்கு இருந்து வெளியால வந்து இப்ப ஒரு கிழமை முதல் தான் இங்க வந்து சேர்த்தவர் ,ஓகே ஆள் எங்க ஆளைத்தான் அப்ப ...

சும்மா இருடா அவர் இயக்கத்தில பெரிய பொறுப்பில இருத்த ஆள் பழைய சண்டைக்காரன் , எங்கட கதைகளை ஆளோட கதைக்காத பிறகு காதை பொத்தி அடிக்கும் ,சரி சரி எங்களுக்கு தேவையான விஷயம் இருத்தால் எடு அங்க போட்டு ,முழுங்க நல்ல வரவேற்பு இருக்கும் தெரியும் தானே உனக்கு ,ம்ம் அது பிறகு பார்ப்பம் இப்ப என்னமாதிரி ஆளை இரவு கூப்பிட்டு அடிப்பமே ... அதுக்குத்தான் வந்தது ஒரு ஒன்பது மணிக்கு தொடங்கு நான் கரிகாலன் தம்பியால வாறன்' நீ ஈழ வேங்கையாள வா சரியா இண்டைக்கு ஒரு கை பார்ப்பம் ,அவன் ,மற்ற பார்ட்டி தான் நான் இளையவன் அண்ணையிட்ட கேட்டனான் ,அவர் சொன்னார் அவன் ஒட்டுக்குழு ஆள் என்றுதான் உன்னை கேட்டதா சொன்னார் மச்சி ..

முன்னாள் போராளி இவங்கள் என்ன கதைக்கிறாங்கள் என்று தெரியாமல் நெக்டோ சோடாவை குடித்தபடி என்னடாப்பா இங்கயும் சண்டையா ,எதாவது இயக்க நிர்வாக பிரச்சினையா ஏன் இதுக்கு எல்லாம் நீங்கள் போறீங்கள் அப்பு கவனம் ,சும்மா வெளிநாட்டில் வந்து எங்கட சனத்துக்கு ஏதாவது செய்ய முயற்சி பண்ணுங்க ' எனக்கு சகோதரம் வெளிநாடு நான் வந்திட்டன் அப்படி இல்லாமல் எத்தினை போராளிகள் அங்க இன்னும் கஷ்டப்படிணம் ,இல்லை அண்ணே இது வேற பிரச்சினை அப்படி ஒன்றும் இல்லை ...

சரி மச்சி வீட்டுக்கு போயிட்டு போன் பண்ணு நான் சாப்பிட்டு வர சரியா இருக்கும் என்று சொல்லிக்கொண்டு பரணி ரயில் தரிப்பிடம் நோக்கி நடந்தான் ,மனம் எல்லாம் அவனை இன்றையோட ஓடபண்ணனும் துரோகி ஆக்கினா சரி ,பிறகு அவருக்கு ஒரு ஆதரவு இருக்காது என்று தனக்குள் சொல்லிக்கொண்டு போக ,தம்பி குகன் ஒரு படம் எடுத்துக்கொண்டு போவம் ,நாளைக்கு வீசா அலுவல் பார்க்க வேணும் ,சரி அண்ணே பக்கத்தில தான் போயிட்டு போவம் என்று இருவரும் நடக்க தொடங்கினர் ..

அண்ணே நீங்க இயக்கத்தில எத்தினை சண்டை போனனீங்கள் ,எங்க எங்க போனனீங்கள் என்று பேச்சை கொடுத்துக்கொண்டு நடந்தான் குகன் , அதை விடு தம்பி சும்மா எல்லாத்துக்கும் போய் இருக்கிறன் ,இங்க எப்படி வீசா போட்டா கிடைக்குமே எனக்கு காயங்களை பார்த்து புலி என்று சொல்லி நிராகரிக்க மாட்டினமே தம்பி ,இல்லை அண்ணே இங்க இரவு கோழி களவுக்கு போய் முதுகில கம்பி கிழிச்சவன் எல்லாம் தான் புலி என்று சொல்லித்தான் வீசா எடுத்து வைத்து இருக்கிறாங்க ..

பரணி வேகமா சாப்பிட்டு மடிக்கணணியை தூக்கி மடியில வைத்தபடி குகனுக்கு போனை போட்டான் மச்சி எங்க வந்திட்டியா வீட்டுக்கு என்று ,ஓ இப்பத்தான் மேல ஏறிக்கொண்டு இருக்கிறன் படியாள என்று மூச்சு

வாங்கியபடி கதைத்தான் குகன் ,அண்ணே பார்த்து வாங்கோ காலும் ஏலாது பிடிச்சு நடவுங்க என்று பின்னாடி வரும் பழைய போராளி அண்ணைக்கு சொல்லிக்கொண்டு



ஒரு டீ குடிப்பம் போடவா அண்ணே என்று கேட்டுக்கொண்டு இருக்க இல்லை அப்பு அதிக சீனி சேர்க்க கூடாது காயத்துக்கு பிரச்சினை இன்னும் இங்க மெடிகல் காட்டும் இல்லை ,நீங்க குடியுங்க எனக்கு வேணாம் என்று சொல்லிக்கொண்டு சோபாவில் சாய்த்தார் முன்னாள் போராளி தம்பி நீர் எங்கையோ ஒன்பது மணிக்கு போறான் எண்டு சொன்னீர் போகவில்லை போல ,இல்லை வீட்டில் இருந்துதான் அது கதைப்பது அண்ணே போறது எல்லாம் இல்லை ,ஆ எதோ சண்டை என்று எல்லாம் சொன்னியள் அதுதான் நான் பயந்து போனன் என்று சிரித்தார் அவர் ...

பரணி மீண்டும் போன் பண்ணி எங்கட ஆள் நிக்கு வா வா குடுப்பம் நான் கரிகாலன் தம்பியை இறகிட்டன் ஏன்டா கொமன்சுக்கு லைக்கு பாயுது அவரை துரோகி என்று சொல்லி குடுத்துக்கொண்டு இருக்கிறன் நீ ,வா ஈழ வேங்கை ஐடியால அவர் ஒட்டுக்குழு ஆள் என்று எல்லோரும் நம்பிட்டினம் என்று மூச்சு விடாமல் வேகமா கதைதான் பரணி ..

இவ்வளவு நேரமும் வரும்போது அவரின் கதைகேட்டுக்கொண்டு வந்த குகனின் மனதில் எவ்வளவு தியாகம் எப்படியான உயிர் கொடுப்புகள் ,அவர் உடலில் உள்ள காயம் இதை எல்லாம் நாம் பேஸ்புக்கில் ஒரு போலி பெயரில் நானே செய்வது போல நானே அங்கு சண்டையில் நின்றது போல எழுதி நாலு லைக்கும் ,என்னையும் போராளியா புலியா பார்க்கணும் என்னும் எண்ணத்தில் எழுதி என் பெயருக்கும் புகழுக்கும் அலைந்து இருக்கிறேன் என்று மனதில் உள்ளே எண்ணி வெட்கபட்டான் குகன் ...

புலிக்கொடியை பிடித்து ,மடித்து போர்த்து எல்லாம் படம் எடுத்து போட்டால் என்னையும் புலியா நினைப்பினம் என்னும் எண்ணமே இருந்தது, ஆனால் ஒரு நாள் புலியா வாழ்ந்து இருந்தால் இந்த வெத்து சினிமாத்தனமான செயலுக்கு வெட்கப்பட்டு இருப்பேன் ,இவ்வளவு கள அனுபவும் உள்ள இந்த அண்ணன் சாதரணமா சொல்லுறார் , அவருடன் ஒப்பிடுகையில் நாம் எம் மண்ணுக்கு இன்னும் ஒரு துரும்பை கூட கிள்ளி போடவில்லை என்பதுதான் உண்மை ..

மீண்டும் போன் அடித்தது டீ ஊற்றியபடி நிண்ட குகன் சொன்னான் எடுங்க அண்ணே எடுத்து ஸ்பிக்கரில் விடுங்க என்று ,அவரும் இணைப்பை எடுத்து ஸ்பிக்கரை அமத்தி விட மச்சான் ஓபிவா மகிந்தன் அண்ணையும் வந்து நிக்கிறார் இரண்டு பெரும் சேர்த்து கொடுக்கிறம் ஆளுக்கு பதில் சொல்ல எல்லாமல் பார்ட்டி திணறுது ,நீயும் சயிட் சப்போர்ட் தந்தால் ஆள் எங்க பொக்ஸ்க்குள் மாட்டிட்டும். இண்டைக்கு செத்தான் என்று சந்தோஷம் மிகுந்த களிப்பில் சொன்னான் பரணி ..

அதை சோபாவில் சாய்ந்து இருந்தபடி புன்சிரிப்புடன் கேட்டுக்கொண்டு இருந்த முன்னாள் போராளியின் மனதில் தீச்சுவாலை சண்டை ஒருநொடி வந்து போனது ,குகன் எதை பேசுவது என்று தெரியாமல் மவுனமா நின்றுகொண்டு இருந்தான் ,மீண்டும் பரணி மச்சி செமையா ஆளுக்கு போட்டுகொண்டு இருக்க ப்ரீ வீப்பி கட்டா போயிட்டு சே என்று வெறுப்பா கத்தினான் ,அட பாவிகளா.! ஈழத்தை இலவச இணைப்பில் எப்படி எல்லாம் பிடிக்கறாங்க! என்று மனதில் சிரித்தான் முன்னாள் போராளி ..அதுக்குள் பரணியின் போனை துண்டித்தான் குகன் ..

பரணியில் போன் மீண்டும் அடித்துக்கொண்டே இருந்தது பேஸ்புக் வேணாம் பேக் ஐடியும் வேணாம் இன்றில் இருந்தாவது இங்கு வந்திருக்கும் அண்ணைக்கு வீசா எடுத்து கொடுக்கும் வரை ,என் சிந்தனை ஓட்டம் எல்லாம் அதுபற்றியே இருக்கணும் என்று நினைத்துக்கொண்டு அண்ணே உங்களுக்கு உடல் நலம் நல்லா இல்லாட்டி நாளைக்கு வைத்தியரை பார்க்க போகலாம் ,இல்லை அப்பு எனக்கு ஒன்றும் இல்லாமல் எப்படி பார்க்கிறது கொஞ்சம் வலி இருக்கு முதுகு பக்கம் ,பிறகு பார்ப்பம் வீசா போட்டுட்டு ..இல்லை என்னுடைய காட்ல காட்டலாம் ஒன்றும் பிரச்சினை இல்லை ...

கரிகாலன் தம்பியின் அழைப்பு பேஸ்புக்கில் ஓவர் ஓவர் என்று ஒலித்துக்கொண்டு இருக்க குகனின் தொலைபேசி அடித்துக்கொண்டு இருக்க எதையும் கவனிக்காது சமைக்க தொடங்கினான் குகன் போலி முகவரியில் ஈழம் பிடிப்பதை விட ஈழத்துக்காக வாழ்த்தவர்கள்,தியாகம் செய்தவர்கள் உயிர் கொடுத்தவர்களுக்கு நாலு உதவி செய்தாலே போதும் என்னும் எண்ணத்தில் அவன் முழுமையா தன்னை மாற்றி இருந்தான்.. தம்பி குகன் போன் அடிக்குது பரணியாம் ,அவன் கிடக்கிறான் லூசுப்பயல் விடுங்க அண்ணே என்று திடமா சொன்னான் குகன் .


JE SUIS
CHARLIE